பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 மாசி 27 பி அல்: 19 இதழ்: 28

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10-3-77

இன்று கச்சதிவு உற்சவம்

## திரும்பிவராத நகைக்கு மூன்று மடங்கு அபராதம்

யாழ்ப்பாணம், வியா. கச்சதீவுக்கு நகை அணிந்து செல்பவர்கள் தமது நகைகள் பற்றிய விபரங்களைக்கொண்ட பத்திரத்தை நிரப்பிக் கொடுத்த பின்னரே பிரயாணம் செய்ய அனுமதிக்கப் படுவர். எஸ். சி.என்.பி. 18 என்ற இலக்கம் கொண்ட இப்பத்திரம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள குறிகாட் (7ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தலைவர்கள் - பிரதமர் சந்திப்பு இறுதிநேரத்தில் ரத்து

## வருத்தம் தெரிவித்தார் பிரதமர்; தொண்டமான் காரணமா?

தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு ஒரு சுமூகமான தீர்வு காணும்பொருட்டு பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகாவுக்கும் தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர் களுக்குமிடையில் நேற்றுப் பிற்பகல் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. "தவிர்க்கமுடியாத காரணத்தால் சந்தித்துப் பேசமுடிய வில்லை. பின்னொரு தினத்தில் சந்தித்துப் பேசுவோம்" என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா தமிழர் விடுதலைக் கூட்ட ணித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு மூற்பகல் அறிவித் தார். பிரதமரைச் சந்திக்கவிருந்த தமிழர்விடுதலைக்கூட்டணித் தூதுக்குழுவில் இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் தலைவர் திரு. சௌமியமூர்த்தி தொண்ட மானும் இடம்பெற்றிருந்ததுதான் பிரதமரே நேரமும் தேதியும் குறித்து நிச்சயித்த பேச்சுவார்த்தையை ஒத்திப்போடுவதற்குக் காரணம் என்று தமிழர் கூட்டணி வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

இத் தூதுக்குழுவில் தமிழர்கூட்டணித் தலைவர்களான திரு. எஸ். ஜே. வி. செல்வ நாயகம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. எஸ். தொண்டமான், கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் அங்கம்பெறவிருந்தனர்.



தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகள் குறித்து தமிழர் கூட்டணியினருடன் பிரதமமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றுமாலைநடாத்தவிருந்த பேச்சுவார்த்தை கடைசிநேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது.

இது சம்பந்தமாகபிரதமரிடமிருந்து திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு நேற்றுக் காலை சுமார் 11-30 மணியளவில் அவசரக்கடிதம் ஒன்று வந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்றுபிற்பகல் சந்திக்க முடியாமல் இருப்பதற்கு வருந்துவதாகவும், மீண்டும் இது சம்பந்தமாக தொடர்பு கொள்வதாகவும் பிரதமர் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### 4-ந் திகதி பிரதமர் எழுதினார்

இம்மாதம் 4ம் திகதி பிரதமமந்திரியிடமிருந்து திரு. எஸ். ஜே. வி.க்கு வந்திருந்த கடிதத்தில் இம்மாதம் 9ம்திகதி தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவிரும்புவதாகவும், 9ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு குடியரசு சதுக்கத்தில் உள்ள தமது காரியாலயத்தில் சந்திக்குமாறும் கேட்டிருந்தார். அத்துடன் சந்திக்கவிருக்கும் தலைவர்களின் பெயர்விபரங்களையும் அனுப்பிவைக்குமாறுபிரதமர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

பிரதமரின் இக் கடிதம் தமிழர் கூட்டணிக்கு கடந்தபுதன் கிழமை கிடைத்ததாம். ஆயினும் நேற்றுக்காலை தமிழர்கூட்டணியின் சார்பில் திரு. மு சிவசிதம்பரம் பிரதமமந்திரியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தங்களது சந்திப்பை உறுதிசெய்தார்.

பிரதமருடன் தமிழர் கூட்டணியின் சார்பில் யார் யார் கலந்து கொள்வார்கள் என்ற விபரங்களையும் திரு. சிவசிதம்பரம் பிரதமருக்குத் தொலைபேசியில் தெரிவித்தார். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. எஸ். தொண்டமான், திரு. மு. சிவசிதம்பரம், திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் இதில் பங்கு பற்றவிருந்தனர்.

இது இப்படியிருக்க, நேற்று முற்பகல் 11-30 மணியளவில் பிரதமமந்திரியிடமிருந்து திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு கடிதம் ஒன்று வந்தது. இதில் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இச் சந்திப்பை நடத்த முடியாதிருப்பதாகவும் பின்னர் ஒரு திகதியில் இது பற்றி மீண்டும் தொடர்பு கொள்வதாகவும் எழுதியிருந்தார். சந்திக்கமுடியாமல் ஏற்பட்டமைக்கு வருத்தமும்தெரிவித்திருந்தார்.

### சந்திப்பு ஏற்பாடுகள் துரிதம்

பிரதம மந்திரியிடமிருந்து 4ம் திகதி கிடைக்கப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் பிரதமரை நேற்றுச் சந்திப்பதற்கு தமிழர் கூட்டணித்தலைவர்கள் தங்கள் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். எவ்விதமானகோரிக்கைகளை முன்வைப்பதுஎன்பது

(8-ம் பக்கம் பார்க்க)

## பகுதியாகவும் வழங்கலாம்

கொழும்பு, புதன்

கூப்பனுக்கு வழங்கப்படும் துணிகளை விரும்பிய அளவு கூப்பன்களைக் கொடுத்து பெறலாமென்று கூட்டுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

ஒருபங்கீட்டு அட்டையில் உள்ள சகல கூப்பன்களுக்கான துணியையும் ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அண்மையில் வெளிவந்தபத்திரிகைச் செய்தி தவறு என்றும் அவ்வாறு கேட்கும் கூட்டுறவுக் கடை முகாமையாளர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி பங்களாதேஷ் விஜயம்

கொழும்பு, புதன்

ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ இம்மாதம் 16-ம் திகதி பங்களாதேஷுக்கு விஜயம் செய்கிறார்.

## ஸ்ரீ வழக்கில் சாட்சியமளித்த பெரியார் மரணம்

மாவிட்டபுரம், புதன்

'ஸ்ரீ' வழக்கில் நீதிமன்றத்தில் தோன்றி சாட்சியமளித்த வேதாகம வித்பன்னர் பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் தமது 59 வயதில் காலமானார்.

மாவிட்டபுரத்தில் வேதாகம நூல்நிலையமொன்றை அமைத்து ஆராய்ச்சியாளருக்கு பெரிதும் உதவிவந்த இவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் பாளி போன்ற பல்வேறு மொழிகளில் பாண்டித்தியம்பெற்று விளங்கி பல மாணவர்களைச் சிறந்த அறிஞர்களாக உருவாக்கிய பெருமைக்குரியவர். (ஆ)

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு! பூட்டோ மறுப்பு

இஸ்லாமாபாத், மார்ச் 9

பாகிஸ்தானில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தல் ஆளும் கட்சிக்கு சாதகமாக திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது என்ற எதிர்க்கட்சிகளின் புகாரை பிரதமர் ஜனப் சுல்பிகார் அலிபூட்டோ வன்மையாக மறுத்துள்ளார்.

இத் தேர்தல் முடிவுகள் மக்கள் அளித்த தீர்ப்பே என்றும் நியாயமான நேர்மையான முறையில் இத் தேர்தல் நடைபெற்றுள்ளது என்றும் ஜனப் பூட்டோ தெரிவித்துள்ளார்.

ஒன்பது கூட்டு எதிர்க்கட்சிகளின் சார்பில் ஆட்சேபனை தெரிவித்த ஜனப் அஷ்கார் கான், தமது கூட்டணி நாளை வியாழக்கிழமை நடைபெறும் 4 மாகாணத் தேர்தல்களில் பங்குபற்றமாட்டாது என்று அறிவித்துள்ளார்.

# புடவை விநியோகத்தில் மோசடி! மக்கள் புகார்

## சங்க மனேஜர்கள் துணிப்புள்ளிகளைத் திருடுகிறார்களாம்

யாழ்ப்பணம், வியா.

யாழ்ப்பாணம் மாநகர ப. நோ. கூட்டுறவுச்சங்க கிளைகளில் துணி விநியோகத்தில் பெரும் ஊழல் நடைபெற்றுவருவதாக பாவனையாளர்கள் புகார்செய்துள்ளனர்.

யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எம். எஸ். பேரின்பநாயகத்திற்கு அரியாலையைச் சேர்ந்த ஒரு பெண் புகார்செய்ததைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்றுள்ளது.

கூப்பன்களில் 4 புள்ளிகளை வெட்டி எடுத்துக் கொண்டு, இரண்டு புள்ளிகளுக்கு மட்டும் துணி வழங்கி மிகுதி துணியை அடுத்தவாரம் வாங்கும்படி கிளை மனேச்சர் அப் பெண்ணிடம் கூறினாராம்.

இதைத் தொடர்ந்து அப் பெண் உச்சி வெய்யிலில் நடந்துசென்று சங்கத் தலைவரிடம் புகார் செய்தார். தலைவர் உடன் நடவடிக்கை எடுத்தார்.

(2-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### விற்பனைக்கு

B. L. கொன்சல் கார் உடனடியாக விற்பனைக்கு, அல்லது வேறுகாருடன் மாற்றத்தயார். மகேந்திரா, மக்கள்வங்கி பிராந்தியக் காரியாலயம், பிரதான வீதி, யாழ்ப்பாணம். 5638

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

சுமார் 5000 சாம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவுத்திகதி 18-03-77 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை. கேள்விப்பணம் ரூபா 2/- செலுத்திக் கேள்விப்பத்திரங்கள் 10-03-77 தொடக்கம் 18-03-77 நண்பகல் 12-00 மணிவரை இச்சங்கக் காரியாலயத்தில்பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணம் ரூபா250/- கேள்விப்பத்திரத்துடன் முடிவுத்திகதிக்கு முன்னதாக 'தலைவர், தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி' என்ற விலாசத்திற்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால்மூலம் அனுப்பி வைக்கவும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர விண்ணப்பம்' என எழுதப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதில்
பொது முகாமையாளர்
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி, 08-03-1977. 5637


## இடர் நீங்குமா?

வவுணதீவு, புதன்

மட்டக்களப்பு' உன்னிச்சை பஸ்சேவை சமீப காலமாக மிகவும் சீர்கேடாக உளளதாக மேற்படி பிரயாணிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளனர்.

மேற்படி பஸ் சேவை சீர்கேடு காரணமாக உன்னிச்சையிலுள்ள தமது விவசாயக் காணிகளுக்கு விவசாயிகள் சென்று வருவதில் மிக்கசிரமங்களும் வீண் காலதாமதங்களும் ஏற்படுகின்றதாம்.

சம்பந்தப்பட்ட பஸ் சேவை தொடர்பாக மேலதிகாரிகள் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென விலியுறுத்தப்படுகிறது. (உ)

யாழ். கல்லூரிகளின் கிரிக்கெட்:

# வீரர் நகுலேஸ்வரனின் அபாரப் பந்து வீச்சு

("தேவா")

யாழ்ப்பாணம், வியா.

கடந்தவாரம் யாழ்ப்பாணக் கல்லூரிகளிடையே நடைபெற்ற ரசிப்பான கிரிக்கெட் போட்டிகளின் விபரங்கள் வருமாறு:

### வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி எத்தரப்பினருக்கும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ்கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 60 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ரெட்ணராஜா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சென் ஜோன்ஸ் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 9விக்கெட் நஷ்டத்துக்கு 130 ஓட்டங்களைப் பெற்றதும், ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. அன்றூ 36 ஓட்டங்களைப் பெற்றார். ஈ. எம். துரைசிங்கம் 52 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சென்பற்றிக்ஸ்கோஷ்டி2வது இன்னிங்ஸில் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டம்முடிவடையும்வரை 7விக்கெட் நஷ்டத்துக்கு 202 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஈ. டி. துரைசிங்கம் 69 ஓட்டங்களையும், எம். ஜே. மலையமான் 39 ஓட்டங்களையும் பெற்றனர். இப்போட்டி சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில்நடைபெற்றது.

### இன்னிங்ஸால் வெற்றி

யாழ். மத்திய கல்லூரிக்கும், குருநாகல் மாலிகதேவா கல்லூரிக்குமிடையில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மத்தியகல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றிபெற்றது.

குருநாகல் மாலிகதேவா கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 53 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 81 ஓட்டங்களையும் பெற்றது. மத்தியகல்லூரி பந்து வீச்சுவீரர் எஸ். நகுலேஸ்வரன் முதல் இன்னிங்ஸில் 24 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளையும், 2-வதுஇன்னிங்ஸில்23ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார். இவர் இந்தப் போட்டியில் தனது அபாரப் பந்துவீச்சினால் மொத்தம் 14 விக்கெட்டுகளை வீழ்த்தியது ஒரு சாதனையாகும். மத்தியகல்லூரி முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 191 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. எஸ். நகுலேஸ்வரனும், ஏ. நவீந்திரனும் முறையே 59, 58 ஓட்டங்களைப் பெற்றனர்.

### இருபோட்டிகளிலும் இன்னிங்ஸ் வெற்றி

யாழ்.இந்துக்கல்லூரி கடந்த வாரம் மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரிகளுடன் கலந்துகொண்ட இரு போட்டிகளிலும் இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றிபெற்றதுகுறிப்பிடத்தக்கது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 88 ஓட்டங்களைப்பெற்றது. வீரர் தயாளன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர். 2-வது இன்னிங்ஸில் 56 ஓட்டங்களையும் பெற்றது. எஸ். சுதாகரன் 13 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

யாழ். இந்துக்கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 222 ஓட்டங்களைப்பெற்றது. வி. சிவகுமாரும், எஸ். தயாளனும் முறையே 28, 26ஓட்டங்களைப் பெற்றனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன், யாழ். இந்து மோதிய போட்டியில், யாழ்ப்பாணக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 108 ஓட்டங்களைப்பெற்றது. 2வது இன்னிங்ஸில் 37 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. எஸ். சுதாகரன் ஒரு ஓட்டத்தைக்கொடுத்து, 3 விக்கெட்டுகளையும், ரி. ரவீந்திரன் 7 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும், ஆர். விஜேந்திரன் 15 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்கள்.

## வேலியே பயிரை மேய்ந்தது

யாழ்ப்பாணம், வியா.

குருநகர் வலைத்தொழிலாளர் சங்கம் ஒன்றைச் சேர்ந்த உபதலைவர் ஒருவர் கடலில் மயிலிட்டியைச் சேர்ந்த ஒருவரின் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளைத் திருடியுள்ளாராம். வலைத்திருட்டு போன்ற பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் தொழிலாளர் சங்க உபதலைவரே இவ்வாறு திருட்டை மேற்கொண்டதனால் இப்பகுதி மீனவரிகளிடையே பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாம்.

திருட்டை ஒப்புக்கொண்ட குறிப்பிட்ட நபர், வலைகளை வாங்கி உரியவரிடம் சேர்ப்பிப்பதாக உறுதிகூறியுள்ளாராம்.

இதையடுத்து குருநகர்ப் பொலிசார் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு யாழ். மாவட்ட மீன்பிடி அபிவிருத்தி உத்தியோகத்தரின் அறிக்கையை எதிர்பார்த்திருக்கின்றனராம்.

(இ)


## முக்கிய அறிவித்தல்

**க. பொ. த. (சாதாரண) பரீட்சை 1977**
**விண்ணப்பப்பத்திரம்**

இவ்வாண்டு கல்வித்திணைக்களம் மேற்படி பரீட்சைக்குரிய விண்ணப்பப்பத்திரம் வழங்க இயலாமை குறித்து ஆங்கிலப் பத்திரிகையில் விளம்பரம் செய்துள்ளது. பாடசாலைகளோ அல்லது தனியார்களோ தத்தமது விண்ணப்பப்பத்திரங்களை தாங்களாகவே தயாரித்து அனுப்பும்படி பணித்துள்ளார்கள்.

**(விண்ணப்பம் செய்யவேண்டிய முடிவு திகதி 10-4-77)**

ஆகவே மாணவ, மாணவிகள் நலன் கருதி இவ்வாண்டுக்குரிய க. பொ. த. (சாதாரண) பரீட்சை விண்ணப்பப்பத்திரம் விற்பனைக்கு உள்ளது.

பாடசாலை அதிபர்களும், மாணவர்களும் தேவைப்படும் விண்ணப்பப் பத்திரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**ஆர். எஸ். அச்சகம்**
149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7669
5639


## மூதூர்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் அல்லற்பட்டோர் துயர் நீக்கவே வேண்டிலர். நெந்துயர் தீர்த்தலும் தீர்க்கும்ஆற்றல் எம்மிடம் இல்லாதபோது அன்பினால் உருகி அருள்நீர்விடுதலும் எமது பண்டைய பண்பாகும்.

இந்நிலையில் இலங்கை வாழ் சைவத் தமிழ் அன்பர்கட்கு ஒரு பெரும் வாய்ப்பாகஅமைந்துள்ளது கைதடிசைவஅநாதை இல்லம். எமது அறச்சாலை, இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று வாழ செலாவணியாக அமைவதோடு நம்சமுதாயத்தில் நல்லதொரு பணிசெய்யும் வாய்ப்பை இந்த இல்லம் அளிக்கின்றது. இதற்குஅன்பர்கள் ஆதரவு நல்கி வாரீர் எங்கி இறையடிபணிவோமாக என்று குறிப்பிட்டுள்ளார். (ஆ)

"35 நாடுகளில்

# தன்னம்பிக்கையின்மையால் பழைமை இனங்கள் அழிந்தன"

வவுணதீவு, புதன்

"தமிழ் மக்கள் இந்நாட்டில் இறைமையோடும், பூரண சுதந்திரத்தோடும் வாழவேண்டும். இந்த இலட்சியம் இலேசானதல்ல. 150 வருடங்களுக்கு முன்பு தமிழர் இருந்த நிலையை – இழந்த உரிமைகளை மீண்டும் பெற விரும்புகிறார்கள். இதை வகுப்புவாதம் என்றோ இனவாதம் என்றோ கூறி, எமது தனித்தமிழ்நாடு இலட்சியத்தை மாற்ற முடியாது."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் கோளாவில் கிராமத்தில் நடைபெற்ற த. வி. கூட்டணியின் பிரசாரப் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

மேற்படி கூட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணி கோளாவில் கிளைத் தலைவர் திரு. ச. சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தை மேற்படி த. இ. பேரவையும் த. வி. கூட்டணியும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

தொடர்ந்து திரு. ஈழவேந்தன் கூறியதாவது:

"தமிழர்கள் இலங்கை நாட்டின் வந்தேறுகுடிகளல்ல. வரலாற்று ரீதியாக உலக நாடுகளிடையே பெரிய வரலாறு படைத்தது தமிழினம். உலகின் 35 நாடுகளில் உள்ள பழைமை பெற்ற இனங்கள் தமக்குள்ளேயே நம்பிக்கையின்மையால் அழிந்துபோயின. தமிழர்கள் எமது தமிழ் ஈழ இலட்சியத்தை அடைவதற்கு தன்னம்பிக்கையையும் கட்டுப்பாட்டையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்."

இக்கூட்டத்தில் த. இ. பேரவை முக்கியஸ்தர்களான திரு. எஸ். கே. மகேந்திரன், மாவை. சேனாதிராஜா, குருநகரைச் சேர்ந்த திரு. அலோஸியஸ் உட்பட கூட்டணிப் பிரமுகர்கள் பலர் உரையாற்றினர்கள். (அ)

# காதல் கைகூடாததால் வாலிபர் தற்கொலை

மாவிட்டபுரம், புதன்

காதலில் தோல்வி ஏற்பட்டதால் மனமுடைந்த வாலிபர் ஒருவர் சாதலே கதிஎனக்கருதி நஞ்சருந்தித்தமது உயிரை போக்கிக்கொண்டார்.

மல்லாகம் கோட்டைக்காடு என்னுமிடத்தைச் சேர்ந்த பொன்னன் சந்திரன் என்ற 24வயது வாலிபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு.நா.தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் காலமானவரின் தந்தை பொன்னன்,தவமணி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

காலமானவர் மல்லாகத்தைச்சேர்ந்தஒரு19வயதுயுவதியைக் காதலித்துவந்ததாகவும் இக்காதலை அறிந்த இருவரினது பெற்றோரும் இக்காதலுக்கு தடையாக இருந்து வந்ததாகவும் இதனால் மனமுடைந்த காலமானவர் நஞ்சருந்தியதையடுத்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு எடுத்து செலலப்பட்டு அங்கு மரணமானதாகவும் சாட்சியங்கள் மூலம் தெரியவந்தது தற்கொலைஎனத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

சுன்னாகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (அ)

## மைத்துனரை வெட்டினாராம்

வண்ணார்பண்ணை, புதன்

மனைவியுடன் மனஸ்தாபப் பட்டதால் கணவன் கத்தி வெட்டுக்கு இலக்கானாராம். காயத்திற்குள்ளான அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மண்டைதீவில்நடந்தஇச்சம்பவம் சம்பந்தமாக யாழ்.குற்றத் தடுப்புப்பிரிவுப் பொலிசார்புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்காயப்படுத்தியதாகக் கூறப்படும் மண்டைதீவைச்சேர்ந்த க. சிவநாதபிள்ளை என்பவரை பொலிசார் தேடிவருகின்றனர்.

தமதுமைத்துனரேகத்தியால் தம்மை வெட்டியதாகக் காயமடைந்தவர் பொலிசில் தெரிவித்துள்ளார்'

மனைவியுடன் வாக்குவாதப்பட்டதாகவும் அப்போது மனைவியை கையால் அடித்ததாகவும் இச்சந்தர்ப்பத்தில் மனைவியின் சகோதரரான சிவநாதபிள்ளை என்பவர் கத்தியால் தம்மை வெட்டிக்காயப் படுத்தியதாகவும் துரைராசா தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். (அ)

## புடவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைலாசபிள்ளையார் கோவிலடி கிளைக்கு வழங்கியவெளிநாட்டுத் துணிகளுக்கு அங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக புகார்செய்யப்பட்டுள்ளது.

ஒரு புள்ளிக்கு ஒரு யார் வெள்ளைத்துணியும் 3 யார் உள்நாட்டுத்துணியுமே இங்கு வழங்கப்படுவதாகபுகார் கூறப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் துணி முடிந்துவிட்டதாக கிளை மனேஜர் கூறுகின்றாராம்.

சில கிளைகளில், சிறு பிள்ளைகள் அரிசிவாங்க கூப்பனைக் கொண்டு செல்லும்போது துணிப் புள்ளிகளையும் மனேஜர்கள் தந்திரமாக வெட்டி எடுத்துவிடுவதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

சில கிளைகளில் துணிகளை அளக்கும்போது 2 அல்லது 3அங்குலம் குறைத்து அளக்கப்படுவதாகவும் புகார்செய்யப்பட்டுள்ளது.

பாவனையாளர்கள்இதில்கண்காணிப்பாக இருக்கவேண்டுமென்றும், துணியோ அரிசியோ வாங்குவதற்கு சிறுவர்களை அனுப்பவேண்டாமென்றும், சங்கத் தலைவர் திரு. பேரின்பநாயகம் பாவனையாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

துணி விநியோகத்தில் ஏதாவது ஊழல்மோசடி நடந்தால் உடனடியாக திரு. எம். எஸ். பேரின்பநாயகம், தலைவர், யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு புகார்செய்யுமாறு பாவனையாளர்கள் கேட்கப்படுகின்றனர். (க-ஆ)


## வாடகைக்கு தேவை

அச்சுக்கூடம் நிறுவுவதற்கு யாழ்நகரில் வாடகைக்கு ஓர் இடம் வேண்டும். காங்கேசன்துறை வீதி, விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும்.

கு. பொ. சி. வரதராசா
120/3, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
5641

ஓராண்டுக்கு முன்னரே

# கருணாநிதியை தயார் நிலையில் இருக்குமாறு ஜெகஜீவன் கூறினாராம்

## தமிழ்நாட்டில் இந்திரா தகவல்

சென்னை, மார்ச் 9

ஜெகஜீவன்ராமின் ராஜினாமா திட்டம் ஒன்றும் புதிதல்ல; வியப்புக்குரியதுமல்ல. ஆனால் அவர் ராஜினாமாவை மனதில் வைத்துக் கொண்டு கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியை தயார் நிலையில் இருக்குமாறுகேட்டிருந்தார். இது பற்றி நான் முன்னர் கேள்விப்பட்டேன். இப்போது அதன் உண்மை தெரிகிறது.

இவ்வாறு பிரதமர் திருமதி இந்திராகாந்தி பழனியில் நடைபெற்ற கூட்டம ஒன்றில் பேசுகையில் கூறினார்.

எதிர்வரும் தேர்தலில் திரு. ஜெகஜீவனுக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட அனுமதி வழங்குவதில்லை என்று நாம் தீர்மானிக்கவில்லை. அவருக்கும் ஒரு தொகுதியைக் கொடுக்கவே தீர்மானித்திருந்தோம் என்றும் திருமதி காந்தி கூறினார்.

கொள்கை இல்லாத சில கட்சிகள் இணைந்து ஜனதா கட்சி என்று ஒரு அணியை தோற்றுவித்துள்ளன. இவர்களுக்கு என்னை வீழ்த்துவதைவிட வேறுகொள்கைகள் கிடையாது. அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில்கூட அவர்களது எதிர்காலத்திட்டம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. என்றும் திருமதி காந்தி கூறினர். (இ)

# மந்திரியாக இருந்தபோது ஜெகஜீவன் என்ன செய்தார்?

## சென்னையில் இந்திரா கேள்வி

சென்னை, மார்ச் 9

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நான் எதுவுமே செய்யவில்லை என்று ஜனநாயகக் கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் கூறுகிறார். என்னைவிட அதிக காலம் அமைச்சராக இருந்த அவர் என்ன சாதித்துவிட்டார்?

இவ்வாறு பிரதமர் திருமதி இந்திராகாந்தி சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கேட்டார்.

தமிழ்நாட்டில் தமது இரண்டு நாள் தேர்தல் பிரசார சுற்றுப் பயணத்தைமுடித்துக்கொண்டு புதுடில்லி திரும்புமுன் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசினர்.

அவர் மேலும் கூறியதாவது: காங்கிரஸ் கட்சி எதையும் செய்யவில்லை என்று கூறும் அவர் அமைச்சரவையில் இருக்கும்போது ஏன் மௌனமாக இருந்தார் என்பதுதான் புரியவில்லை.

காங்கிரஸ் செய்தவை தவறாக இருந்தால் அவர் அவற்றுக்கு எதுவித மாற்றுத் திட்டத்தையும் சமர்ப்பிக்கவில்லையே இன்றுவரைகூட அவர்

(5-ம் பக்கம் பார்க்க)

கடந்த 19 மாத அவசரநிலை ஆட்சியில்

# அச்சம்நிறைந்தசூழ்நிலையில் மக்கள் வாழ்ந்தனர்

## குஜராத்தில் மொரார்ஜி

புதுடில்லி, மார்ச் 9

பத்திரிகைக் கட்டுப்பாடு அவசரநிலை, அரசியல்சாஸனத் திருத்தம், 'மீசா' சட்டம் ஆகியவற்றினால் பொதுமக்கள் கடந்த 19 மாதங்களாக அச்சம்நிறைந்த சூழ்நிலையில் வாழ்ந்துவந்திருக்கிறார்கள்.

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர் திரு. மொரார்ஜி தேசாய் குஜராத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

ஜனதா கட்சி ஆட்சியில் இந்நிலை முற்றாகத் தவிர்க்கப்படும் என்றும் பொதுமக்களை அஞ்ச வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது–

ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் பத்திரிகைத்துறை, நீதித்துறை ஆகியவற்றின்சுதந்திரம் பேணிப் பாதுகாக்கப்படும். அத்துடன் அவசரநிலை, அரசியல் சாசனதிருத்தம் ஆகியன ரத்துச்செய்யப்படும். கிராமப்புறங்களில் அதிக தொழிற்சாலைகள் திறக்கப்படும். (இ)

அதிபர் அலண்டே சதிப் புரட்சி:

# அமெரிக்காவின் மன்னிப்பும் மறுப்பும்!

ஜெனிவா, மார்ச் 9

சிலியில் ஜனாதிபதி அலண்டேயின் ஆட்சியைக் கவிழ்க்க மேற்கொள்ளப் பட்ட சதியில் தாம் ஏற்ற பங்குக்காக அமெரிக்கா நேற்று பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கியநாடுகள் சபையின் மனிதவுரிமைகள் கமிஷனின் மகாநாடு ஒன்றிலேயே இந்த மன்னிப்புக் கோரப்பட்டது.

மனிதவுரிமைகள் கமிஷனின் அமெரிக்கப்பிரதிநிதி திரு. தைசன் மகாநாட்டில் பகிரங்க மன்னிப்புக் கோரினர்.

### அமெரிக்க அரசு மறுப்பு

இதே வேளையில், அமெரிக்க அரசாங்கம் மன்னிப்புத்தொடர்பாக வெளிவந்த செய்தியை மறுத்துள்ளது.

### தனிப்பட்ட கருத்து

மனித உரிமைகள் கமிஷனின் அமெரிக்கப் பிரதிநிதி சிலி சம்பவம் தொடர்பாக தமது தனிப்பட்ட கருத்தைக் கூறியிருக்கிறாரே ஒழிய இது அமெரிக்க அரசின் கருத்தல்ல என்று யு.எஸ் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் சிலியில் அதிபர் அலண்டேயின் ஆட்சியைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட சதிப் புரட்சியின் போது அதிபர் அலண்டே கொல்லப்பட்டதும் அவரது மனைவி உட்படபலநூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே. (இ)

# மூளையைக்கெடுக்கும்மருந்து மனிதர்மீது சோதனையாம்

## சி. ஐ. ஏ. மீது குற்றச்சாட்டு

பிரான்ஸிஸ்கோ, மார்ச் 9

''விசாரணையின்போது மனிதர்களைப் 'பேச' வைப்பதற்கு மனித மூளையின் மீது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய மருந்து வகைகளை மனிதர்கள் மீது சி.ஐ. ஏ. பரிசோதித்து பார்த்தது, இப் பரிசோதனைக்குட்பட்ட பலர் மூளை பேதலித்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்'' என கலிபோர்னிய சிறையில் பிரதம அதிகாரி எல். கினிஜென் கூறியுள்ளார்.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஆர்.டெல்லம்ஸ் சி. ஐ. ஏ. யின் இவ்வாறான பயங்கர பரிசோதனைகள் பற்றி குற்றச்சாட்டுகளைத் தாக்கல் செய்ததைத் தொடர்ந்தே சிறையதிகாரி கினிஜென் மேற்படி அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கலிபோர்னியச் சிறைகளில் இவ்வாறான பயங்கர பரிசோதனைகள் 1973ல் நிறுத்தப்பட்டன என கினிஜென் கூறிய பொழுதிலும், நாட்டின் இதர பகுதிகளில் சி.ஐ.ஏ. இவ்வாறான பரிசோதனைகளைத் தொடர்ந்து நடாத்தி வருவதாக அமெரிக்கைப் பத்திரிகைகள் கூறுகின்றன. (இ)

......

# இஸ்ரேலுக்கு அமெரிக்க போர் விமானம்

வாஷிங்டன், மார்ச் 9

அமெரிக்கா இஸ்ரேலுக்கு எப்.-16, போர் விமானங்களை வழங்கும் என்று அமெரிக்க அதிபர் திரு.ஜிம்மி.கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

# இந்தியத் தேர்தல் அரங்கு

### ஜெயப்பிரகாஷ் — மொரார்ஜி இணைப்பு சந்தர்ப்பவாதமே

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனும் திரு. மொரார்ஜிதேசாயும் இணைந்துள்ளமை வெறும் சந்தர்ப்பவாதமே என்று இந்திய ராஜ்யசபை உறுப்பினர்கள் 6 பேர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### ஜனதா நிலையான ஆட்சி அமைக்கும்

இந்தியாவில் ஜனதா கட்சி காங்கிரஸ் கட்சியைவிட நிலையான ஆட்சியை அமைக்கும் என்பதில் ஐயமில்லை என்றும் ஜனதா கட்சியினால் நிலையான ஆட்சியை அமைக்க முடியாது என்று கூறுவது தவறு என்றும் பம்பாயிலிருந்து பட்னா திரும்பும்போது கல்கத்தாவில் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்தார்.

### தி. மு. க. தேர்தல் நாடகம்

தி. மு. க. தேர்தல் பிரசாரத்திற்காக முரசொலி மா. பாண்டியன் எழுதிய 'வெற்றிமணி' என்ற நாடகத்தை ஜீவா – சந்திரன் நாடக மன்றத்தார் தயாரித்துள்ளனர்

### ஒரே நாளில் 10 லட்சம் பேரை சந்தித்தார்

திருநெல்வேலி மாவட்டத்தில் கழகம் மற்றும் ஜனதா அணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி ஒரு நாளில் மட்டும் பத்து லட்சம் மக்களுக்குமேல் சந்தித்தார். காலையில் பாளையங்கோட்டையில் 2 லட்சம் மக்களிடையே பேசிய திரு. கருணாநிதி அடுத்து திருவைகுண்டத்தில் 25 ஆயிரம்பேர் மத்தியிலும், ஏரலில் 5 ஆயிரம் பேர் மத்தியிலும். தூத்துக்குடியில் 3 லட்சம் பேர் மத்தியிலும் பேசினார் நாட்டில் உண்மையான கூட்டாட்சி நிலவவேண்டுமென்பதே தங்கள் கொள்கையென்று பல்லாயிரமே அகாலிதளம் தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

### சஞ்சேய் காந்தியை வரவேற்க ஆளில்லை

பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் புதல்வரான சஞ்சேய் காந்தி தனது சொந்தத் தொகுதிக்கு மனைவியுடன் சென்றபோது அங்குஅவரை வரவேற்க யாருமே வரவில்லை. முன்பெல்லாம் அவரை வரவேற்க கவனர்களும் முதலமைச்சர்களும், அதிகாரிகளும் வருவது வழக்கம். சஞ்சேய்காந்தி தமது மனைவியுடன் இரவு விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது அவர் செல்வதற்கு எந்தக் காரும் இல்லை. இந்தத்தகவலை 'இந்தியன் எக்ஸ்பிரஸ். வெளியிட்டுள்ளது.




### மணிவாக்கு

தனிமனிதனுக்கு உணவு அளித்தால் மானிட இனம் முழுவதையும் உயிர்ப்பிப்பதை ஒக்கும்.

-குரான்


ஈழநாடு

THE EELANADU


## அநாதைகள் கொடிநாள்

கைதடியிலுள்ள இலங்கை சைவ அநாதை இல்லத்தின் கொடித்தினம் இன்று.

தந்தையைப் பிரிந்தவர்கள் தாயில்லாதவர்கள், தாயையும் தந்தையையும் இழந்தவர்கள், உற்றார் உறவினர் என்று சொல்வதற்கே எவரும் இல்லாதவர்கள் எந்தத் தருமவானாவது ஒரு நேரச் சோறு கொடுப்பானா என்று ஒட்டி உலர்ந்த வயிற்றுடன் ஏங்கி நிற்கும் கண்ணுவிக் காட்சிகள் நமது நாட்டில் காண முடியாதவையல்ல.

இவர்கள் அநாதைகளாகவே வாழ்ந்து அநாதைகளாகவே மடிய வேண்டுமா?

அன்னசத்திரம் ஆயிரம் வைப்பதிலும் பார்க்க ஓர் ஏழைக்கு எழுத்தறிவிப்பது கோடிபுண்ணியம் என்கிறார் பாரதியார்.

கைதடியிலுள்ள சைவ அநாதை இல்லம் இப்போது முப்பத்திரெண்டு பிள்ளைகளுக்குப் புகலிடமளித்துள்ளது.

காரைநகர், மட்டக்களப்பு, திருக்கோணமலை, நாவலப்பிட்டி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் இந்தப் பிள்ளைகள்.

இவர்களுக்கு உணவு, உடை கொடுத்து கல்வியும் அளிக்கப்படுகிறது.

விவசாயம், நெசவு, நூற்பு அச்சகப் பயிற்சி, வியாபாரம், சவர்க்காரம் செய்தல், சக்கரை உற்பத்தி, தும்பு வேலை, தையல்வேலை, பன்னவேலை முதலியவற்றில் பயிற்சி அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

தருமம் செய்யவேண்டுமென்று சிந்திப்போர் பலருண்டு

சிலருக்கு அந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை.

கைதடியிலுள்ள இலங்கைச் சைவ அநாதை இல்லம் தருமம் செய்யவேண்டுமென்று நினைப்போருக்கு ஒருவரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

எத்தனையோ பேர் எப்படி எப்படியெல்லாமோ செலவு செய்கிறார்கள்.

"இந்த அநாதை இல்லத்திற்கு மாதம் மூன்றுரூபாய் கொடுத்தால் ஒரு அநாதைப் பிள்ளைக்கு மாதத்தில் ஒரு தடவையாவது ஆறுதல் கொடுத்தவர்களாவர். மாதம் ஐந்து ரூபாய் கொடுப்பவர் ஒரு பிள்ளைக்கு மாதம் இருமுறை உணவு கொடுந்தவராவார். மாதம் எழுபத்தைந்து ரூபாய் கொடுப்பவர் ஒருஅநாதைப் பிள்ளையை மாதமுழுவதும் பராமரித்தவராகிறார். ஒரு பிள்ளைக்கு ஒரு தொழிலைக் கற்றிக் கொடிப்பவர் அல்லது ஒரு தொழிலைக் கற்றிக் கொடுக்கும் பொறுப்பை ஏற்பவர் அந்தப் பிள்ளையை வாழ்நாள் முழுவதும் பராமரித்தவராகிறார்.

இப்படி விளக்கம் தந்து அநாதை இல்லத்திலுள்ள பிள்ளைகளுக்கு உதவியளிக்கும்படி வேண்டுகோள்விடுத்திருக்கிறார் இல்லத்தின் கௌரவ பொதுச்செயலாளர் திரு. ஆ. கந்தையா.

'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்' என்றார் ஒரு மகான்.

இறைவனைத்தேடி அலைய வேண்டியதில்லை. இந்தஅநாதைப் பிள்ளைகளிடத்திலேயே இறைவனைக் காணலாம்.

அநாதைகள் என்ற சிந்தனையே இல்லாமல் இந்த உலகில் நாமும் மற்றவர்கள், வாழத்தான் போகிறோம்; வாழமுடியும் என்ற தன்னம்பிக்கையுடன் வருங்காலத் தலைவர்களை உருவாக்குவதற்கு சைவ அநாதை இல்லம் நல்லதொரு சந்தர்ப்பத்தைத் தந்திருக்கிறது.

இன்று அநாதைகள் கொடிநாள்.

தாராளமாகப் பணம் கொடுத்துகோடிபுண்ணியம் சம்பாதிக்கும் சந்தர்ப்பத்தை மக்கள் இழந்துவிடமாட்டார்களென்று நம்புவோம்.

ஆசிரியருக்குக் கடிதம்:

## இணக்கம் காணமுடியாதா?

தமிழர் கூட்டணியும் முஸ்லீம் ஐக்கிய முன்னணியும் ஒன்ருக இணைந்த செய்தி தமிழர் உள்ளங்களில் எல்லாம் தேனுகப் பாய்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை, "எங்கள்பகைவர் எங்கோ மறைந்தார்..." எனப் பூரிப்பதற்கு இன்னும் ஒரு சிறுதடையுண்டு. தமிழர் சுயாட்சிக்கழகம், ஈ. த. ஒ. முன்னணி போன்றன இன்னும் கூட்டணியில் இணையாததைத்தான் குறிப்பிடுகிறேன். "தமிழ்ஈழம்" பற்றிச் சிந்தித்திராத முஸ்லீம் ஐக்கிய முன்னணியே அதனை ஏற்று இணைந்து விட்டபின்பு "தமிழ் ஈழம்" கோரிக்கையின் முன்னேடிகளான நவமும் சுந்தரும் கூட்டணியிலே இணைவதிலே சிரமமிருக்கமுடியாது. குறிப்பாக சுந்தரது 'வீரஉணர்வும்' நவத்தின் 'மூளைத்திறனும்' திரு. கோவைசுமரன் போன்றவர்களின் தியாகமனப்பான்மையும் வீண்போகக்கூடாது இவர்கள் அனைவரையும் கூட்டணியில் இணைப்பதற்கு தமிழர் நலன்விரும்பிகள் யாராவது உடன் ஈடுபடவேண்டும் என்பதுதான் தமிழர் பலரது தீராத அவாவாகும். வெறும் கடிதப் போக்குவரத்துகளை விடுத்து அனைவரும் ஒருபொது இடத்திலே கூடி மனம்விட்டுப் பேசவேண்டும். பரஸ்பரம் சந்தேகங்களைத் தெளிவாக்க மனம் திறந்து பேசுவது பெரிதும் உதவும். முஸ்லீம் ஐக்கிய முன்னணி விடயத்தில் அக்கறை எடுத்த தமிழர்கூட்டணித்தலைவர்கள் இதுவிடயத்திலும் கவனமெடுக்க வேண்டும். அடுத்ததேர்தலில் ஒரே கொள்கையுடைய மூன்று சக்திகள் தம்முள் அடிபடுகின்ற நிலையைத் தவிர்த்து அக் கொள்கையை வென்றெடுக்கும் விடயத்தில் இணக்கம் காண முயலவேண்டும் நடக்குமா? நடக்க வேண்டும்.

சி. வைத்திலிங்கம்,
கொழும்பு.

# சைவ அநாதை இல்லத்திற்கு தாராளமாக உதவுங்கள்

கைதடி இலங்கைச் சைவ அநாதை இல்லக் கொடிநாள் இன்ருகும். இதனை முன்னிட்டு சாவகச்சேரி எம். பி. யும் இவ்வில்ல வளர்ச்சியின் பங்காளியுமான திரு. வி. என். நவரத்தினம் விடுத்துள்ள செய்தி வருமாறு:



கைதடியில் ஓர் அநாதை இல்லம் அகில இலங்கை ரீதியில் அமைத்து, நிரந்தர மாடிக் கட்டிடம் நிறுவி முப்பதுக்கு மேற்பட்ட பெற்ரோரற்ற வறுமையின் கோரப்பிடியில் சிக்கிய பல சிறுவர் சிறுமிகளை ஆதரித்துவருவதை அனைவரும் அறிவார்கள். வடக்கே அசோகச் சக்கரவரத்தியும் தெற்கே சேர சோழ பாண்டியரும் ஆண்டகாலம் முதலாக நம்மவர் பல சமயத்தொண்டுகளைச் செய்துள்ளார்கள். சத்திரங்கள் அமைத்தல், கேணிகுளம் தோண்டல், தண்ணீர்ப்பந்தல் நிறுவல் ஆதியன அவற்றுட்சிலவாகும். இவற்றுள் எல்லாம் மேலாக மதிக்கக்கூடியவகையில் சைவ அநாதை இல்லம் அமைத்தல் ஒரு சிறந்த பணியாகும்.

ஊண் இன்றி, உடையின்றி இருப்பவர்கள் எத்தனையோ பேர்; தாய்தந்தையை இழந்தோர் எத்தனையோபேர்; உற்ருர் உறவினர்களின்றி ஊர் ஊராகச் சுற்றித்திரிபவர்கள் எத்தனையோபேர். இவர்களின் உடைந்த உள்ளம்தானேஇவர்களைச் சமூகவிரோதிகளாக்குகின்றது, சமய விரோதிகளாக்குகின்றது. இவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவேண்டியது எமது தலையாய கடமையல்லவா?

பல்லாண்டுகாலம் எண்ணக்கருவாக இருந்த இப்பெரியதிட்டம் பல பெருமக்களின் பேராதரவினுல் கைதடியில் சைவ அனுதை இல்லமாக உருவாகியிருப்பது எமது பெரியஅதிர்ஷ்டமே. ஆனுல் இப்பணியைத் தொடர்ந்து முடிக்கப் பலலட்ச ரூபா தேவையென்பதைநினைக்கும்போது சிறிது அச்சமே தோன்றுகின்றது.

ஆனுல் வானளாவிய கோபுரங்களையும் மலைக்கோட்டைகளையும் பாரிய அரண்களையும் சமைத்த தமிழ்ப் பெருமக்களுக்கு இது ஒரு சிறிய காரியமே. இதுவரையில் இப்பணிக்குப் பணம்கொடுத்தோர்பலர்; சிரமதானம் செய்தோர் பலர். இன்னும் பொருளைவாரிவழங்க ஆயத்தமாய் இருப்போர் மிகப் பலர். இஃது அவர்கள் செய்யும் அறம். இதற்கு இனைஞர் என்றில்லை, முதியவர் என்றில்லை. இன்றில்லை, இன்னும் பொறுத்துச் செய்வோமென்றில்லை அன்றறிவாம் என்னுது அறம்செய்க என்ருர் வள்ளுவப் பெருந்தகை.

இலங்கை சைவ அநாதை இல்லத்தின் செயற்குழு அநாதைகளுக்காக நிரந்தரக் கட்டிடம், விடுதி, கல்விவசதிஎன்பன செய்துகொடுத்துப் பிள்ளைகளைச் சமயவாழ்வில் ஈடுபடுத்திவருகின்றனர். தொழிற்பண்ணைகள் அமைத்து இன்னும் எத்தனையோ திட்டங்களை நிறைவேற்ற சைவப்பெருமக்களும் சைவ அபிமானிகளும் தாராள சிந்தையுடன் உதவ முன்வரவேண்டும். இத்தொண்டில் தீவிரமாக இரவுபகலாக ஈடுபட்டு உழைக்கும் பொதுச் செயலாளர் திரு. ஆ. கந்தையாவுக்கும், செயற்குழுவினருக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பது எமது கடமையாகும். ஆகவே பெரியோர்களே இப்பாரிய தொண்டினைச் செய்துமுடிக்க பொன்னுடையோர் பொற்குவை நல்குங்கள், அதுவும் இல்லாதவர்கள் தங்கள் இனியசொற்களால் உற்சாகப்படுத்தி இப்பணியைச் சிறப்புற நிறைவேற்ற ஒத்துழைக்குமாறு சைவத்தின் பெயரினுலும் தமிழின்பேரினுலும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன். நாம் செய்யும்அறம் பிறர்க்காவதுண்டோ. அதுவேமறுமைக்கும்.

சகல அன்பர்களினது ஆசாவினுல் இலங்கை சைவஅநாதை இல்லம் ஒரு சர்வதேசஅநாதைகள் இல்லமாகத் திகழவேண்டுமென வாழ்த்துவோம். (அ)

# கொடித்தினத்திற்கு உதவி அநாதைகளை இரட்சியுங்கள்

## சைவ அநாதை இல்ல நற்பொறுப்பாளர் கந்தையா வேண்டுகோள்



அன்பும் அதன் குழந்தையாகிய அருளும் எங்கு எவரிடம் தங்குகின்றனவோ அங்கே சீருந்திருவும் நிரம்பிவழியும் இவர்களிடமே உலகம் இன்பத்தை அடைந்துகொண்டிருக்கும். எல்லாம்வல்ல தெய்வமும் அவர்களிடமே நடம்புரியும் எனத்தரும சாத்திரங்களும் உறுதிப்படுத்துகின்றன. இந்தஉயர்வுக்குணம்கொண்ட அருளாளர்களிடம் உள்ள பொருளே இலங்கைச் சைவ அநாதைகளின் இல்லமாக கைதடியில் கண்டி வீதியின் அருகே கால் ஊன்றி மிளிர்கின்றது. பல அருளாளர்களின் பொருளின்பூரிப்பே இந்த புண்ணிய இல்லமாக இமயமலைபோல் உயர்ந்து விளங்குகின்றது. கருணை உள்ளம் படைத்த காருண்யவான்கள் பலரின் நிலையான சிந்தனையே நாம் காண்கின்ற இலங்கைச் சைவஅநாதை இல்லம் ஆகும். இதன் பொலிவு ஒவ்வொருவரின் நெஞ்சிலும் வற்ருத பொய்கையாய் அன்பையும் அருளையும், கருணையையும் அள்ளி வீசுகின்றது.

முப்பத்திரண்டு குழந்தைகளையுடைய இவ்வில்லத்தினைச் சென்ற ஆவணிமாதம் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் தவத்திரு ஜீவானந்தா மகாராஜின் நல்லாசியுடன் திறந்துவைக்கப்பெற்றுச் சிறப்புடன் வளர்ந்து வருகின்றது. இங்கு வாழும் பிள்ளைகள் அகில இலங்கை ரீதியில் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்கள். பலர் தாய் தந்தையர் அற்ற செல்வக் குழந்தைகள் சிலர் தாயை மட்டும் உடையவர்கள். ஒரு சிலர் தாயும் தந்தையுமிருந்துகொண்டே வறுமையின் கோரப்பிடியினுல் அலைந்த அபலைக்குழந்தைகள் அன்பர் பணி செய்ய ஆளாக்கிவிட்ட இறைவன், எல்லாம் இனிது நிறைவுபெற எல்லோர் உள்ளக்கோயில்களிலும் கருணைபாலிக்கவேண்டும். அர்ச்சனை பாட்டேயாகும் என்ற இறைவன் ஐந்தொழில் புரியும் அனந்த நடராசவடிவமும் அம்பிகையின் கருணைபெருகும் மங்கள வடிவமும், அம்மையே அப்பா என்று உருகும் மாணிக்கவாசகர் வடிவமும் நாம்காண்கின்ற அநாதைகளின் இல்லத்தில் ஒளிவளர்விளக்காய் விளக்கமுறுகின்றன அநாதைக்குழந்தைகளும்நாமும்ஏகன்அநேகன் இறைவன் வாழ்க என்று வாழ்த்திவணங்க நம்மை அர்ப்பணம் செய்யவேண்டும். ஆண்டவன் சொத்துக்குத் தர்மகர்த்தாக்களாக அனுப்பப்பட்ட பணம்படைத்த பெரியோரே இல்லத்தை நோக்கிவாருங்கள். வந்து கைகொடுங்கள் என அன்புடன் அழைக்கின்ரேம்.

இல்லத்தில் வாழும் பிள்ளைகளுக்கு விவசாயம் நெசவு, நூற்பு அச்சகப்பயிற்சி, பண்ணை வியாபாரம், பிரம்பு முதலாய தொழில்களில் பயிற்சி அளித்தல், பின்னல் வேலை. சவர்க்காரம் செய்தல், சர்க்கரை தயாரித்தல் தோற்தொழில், தும்புவேலை, தையல் வேலை, பன்னவேலை, குங்குமம், சந்தணம், விபூதி கற்பூரம், போன்றவைகளை உற்பத்தி செய்ய வசதியளித்தல், அவரவர் பெயரால் அல்லது தாய் தந்தையர் பெயரால் ஒருவறிய குழந்தையின் வளர்ப்புச் செலவைப்பொறுட்பேற்று நடாத்த வசதியளித்தல்- இத்தகைய பல நற்பணிகளைச் செய்து கொடுக்கப் பொதுமக்களுக்கு வாய்ப்பளிக்கின்றது இவ்வில்லம். தருமம் செய்வோருக்கு இவ்வில்லம் ஒருவரப்பிரசாதமாக விளங்குகின்றதெனலாம்.

நாங்கள் எந்தச் சமுதாயத்தின் அங்கத்தவர்களோ, அதே சமுதாயத்தின் அங்கத்தவர்களே திக்கற்றவர்களும் என்பதை நாம் உணரவேண்டும்.

(7-ம் பக்கம் பார்க்க)

**விவாதமேடை**

# இளைஞர்களின் முன்னேற்றப் பாதையில் குறுக்கிடாதீர்

## சுந்தரருக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி இளைஞர்கடிதம்

தேர்தல் வருவதற்கு முன்பே கட்சிகள் கச்சைகட்டத் தொடங்கிவிட்டன. தமிழ் மக்களின் பிரச்னைகள் பற்றியும் பலரும் அக்கறைகொள்ளத் தொடங்கியுள்ளனர். இதேசமயம் தமிழ்க் கட்சிகளுக்குள்ளும் பழைய புதிய சர்ச்சைகள் கிளம்புகின்றன. கவிஞர் காசிஆனந்தனைத் தன்பக்கம் இழுக்க சுந்தரர் கடிதம் எழுதியதையும் அவருக்குக் கவிஞர் காசி எழுதிய பதிலையும், சுயாட்சிக் கழகம் கூட்டணிபற்றி விடுத்த அறிக்கையையும் அதற்குக் கூட்டணியை உருவாக்கியவர்களில் ஒருவரான திரு. ஞானமூர்த்தி கொடுத்த விளக்கத்தையும் நாம் வெளியிட்டு சகலரது கருத்துக்கும் 'களம்' அமைத்துக் கொடுத்தோம். இந்த விவாதமேடையில் இன்று கவிஞருக்கும் சுந்தரருக்கும் இடையே உடுப்பிட்டித் தொகுதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரான இளைஞர் திரு. கே. ரி. இராஜசிங்கம் தலையிடுகிறார். விவாத மேடை அமைத்திருக்கிறோம்.

—ஆ-ர்.

அன்புள்ள சுந்தரலிங்கம்ஐயா,

அண்மைக்காலத்தில் வெளிவந்த ''ஈழநாடு'' தினசரி மூலம் தங்களுக்கும் கவிஞர் காசிஆனந்தன் அவர்களுக்குமிடையில் நடைபெற்று வரும் பகிரங்கக் கடிதங்களைப் படிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டிற்று.

இவ்வாறான பகிரங்கக்கடிதங்கள்மூலம் எமது நாட்டின் அரசியல் தலைவர்களின்பழைய அரசியல் தகடுதத்தங்களைப் படிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அதற்காக உங்களுக்கு முதலில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தங்களின் கடிதங்களின் படி நீங்கள் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

1. கடந்த 60 வருட காலமாக அரசியலில் ஈடுபட்டுள்ளீர்கள்.
2. 1950-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நீங்கள் பெயர்பெற்ற கமக்காரன்
3. தமிழர் கூட்டு முன்னணி வல்வையில் அமைக்கப்பட்டு இற்றைவரை தந்தை செல்வநாயகத்தின் தலைமையை நீங்கள் ஏற்கவில்லை.
4. நீங்கள் 1958, 59-ம் ஆண்டுகளில் தென்னிலங்கைக் காடையர்களை எதிர்த்து போர் புரிந்துள்ளீர்கள். செட்டிகுளத்தில் மூன்று கொரில்லாக்களுக்கு துப்பாக்கியும் தோட்டாக்களும் கொடுத்து அனுப்பியுள்ளீர்கள். மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காக உங்களை வீரன் என்று குறிப்பிட்டுக்கொள்கின்றீர்கள்.
5. முருகனின் உத்தரவின்படி மாவைக் கந்தனின் ஆலயத்துக்குள் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரான சிறுபான்மைத் தமிழ் மக்கள் என்று அழைக்கப்படுபவர்கள், ஆலயத்தினுள் தங்கள் கூற்றுப்படி பலாத்காரமாக உட்பிரவேசிக்கவிடாமல் தடுத்தீர்கள் மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்தால் தடுக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

அது மாத்திரமன்றி ''தமிழரசுக்கட்சி 1948. 49-ல் உருவாகியது ஏன் என்றால். பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா திரு. செல்வநாயகத்திற்கும் மந்திரிப்பதவி கொடுக்காமல் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்குக் கொடுத்தபடியால்தான். இதுதான் உண்மை. உங்கள் தந்தை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து விலகியதற்குக் காரணம் இந்தியா-பாகிஸ்தானிய பிரஜாவுரிமைப் பிரச்னை என்று சொல்லுவது தவறாகும்'' என்று எல்லாம் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தங்களின் கூற்றுக்களை நாம் விவாதத்திற்காக ஏற்றுக் கொள்வதாக வைத்துக்கொள்வோம். இன்று நீங்கள் தமிழ் ஈழம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்கள் என்பது உங்களின் கடிதங்களின் மூலம் தெரியவருகின்றது. இந்த முயற்சியின் காரணமாக கவிஞர் காசிஆனந்தனைப்போன்றஇளைஞர்களை உங்கள் அணியில் சேர்த்து, உங்கள் தலைமையை ஏற்று உழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றீர்கள்.

எனக்கு இப்பொழுது 36 வயதாகின்றது. நான் கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினராக இருந்துவருகின்றேன். உங்களின் மாற்றுக் கட்சியைச சேர்ந்தவனாக இருந்தபோதிலும் உங்களின் பகிரங்க அழைப்புக்கள், கடிதங்கள் கிளப்பிய சலசலப்பின் காரணமாக இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுத முன்வருகின்றேன்.

### இந்த நிலைக்கு யார் காரணம்?

நான் என்றும் என்னை இலங்கைத் தமிழனென்று கூறுவதில் பெருமைப்படுபவன். எனவே இன்று நாட்டில் தமிழினம் அடைந்துள்ள இழிநிலைக்கு சோல்பரி ஆணைக்குழுவினரின் சிபார்சை அடுத்து உருவாக்கப்பட்ட பாராளுமன்ற பிரதிநிதித்துவ ஆட்சிமுறையின் கீழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட தமிழ்த்தலைவர்களான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. வி. சுந்தரலிங்கம் ஆகியோரே காரணமாவர்.

நீங்கள் 1947ம் ஆண்டிலே பாராளுமன்றப் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டீர்கள். அதை அடுத்து யு. என். பி. கட்சியின் தலைவரான திரு. டி. எஸ். சேனநாயக்காவின் அந்தரங்க ஆலோசகராக இருந்தீர்கள். அமைச்சர் பதவிபெற்றீர்கள்.

1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து கிட்டிற்று. இதேசமகாலத்தில் இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் மகாத்மா காந்தியின் தலைமையில் நடைபெற்றது.

அந்தக்காலத்தில் வாழ்ந்த முகமது அலிஜின்னா இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம் மக்களுக்கு என்று தனியானஇராஜ்யமாக பாகிஸ்தானைப் பிரித்து தருமாறு போராடி, முஸ்லிம் மக்களிடையில் எழுச்சியை உருவாக்கி, இறுதியில் பாகிஸ்தான் என்ற நாட்டை உருவாக்கினார்.

போர்த்துக்கேயர் இந்த நாட்டிலே யாழ்ப்பாண இராஜ்யத்தின் கடைசி மன்னனான சங்கிலிமன்னனை கைது செய்யும்வரை, இந்த நாட்டிலே தமிழருக்கென்று தனியான ஒரு இராஜ்யம் இருந்திருக்கின்றது. எனவே 1948-ம் ஆண்டியே டொமினியன் அந்தஸ்தை எம்மை ஆண்ட இங்கிலாந்து நாட்டவர்கள் வழங்க முன்வந்த போது, தமிழ் ஈழத்தைப் பிரித்து தருமாறு திரு. செல்வநாயகம் கோரத் தவறிவிட்டார். அதைமறப்போம். அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கோரத்தவறிவிட்டார். அதையும் மன்னிப்போம். வன்னியின் சிங்கமும், வீரன் என்றும் உங்களை நீங்களே குறிப்பிட்டுக் கொள்கின்றீர்கள். நீங்களாவது அன்றையை காலத்தில் போராட்டம் நடத்தினீர்களா? ஏன் அன்று செய்யவில்லை. மாண்புமிகு அமைச்சர் பதவி வழங்கிய சுகபோகம் உங்களின் சிந்தனைசக்தியை தடை செய்துவிட்டதா? இன்றேல் அமைச்சர் பதவி, பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் அவைகள் வழங்கிய சொகுசான வாழ்க்கை முறைகள் இனப் பிரச்னைகள் சம்பந்தமாக சிந்திக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தவில்லையா?

''சென்ற 30 வருடகாலமாக நடந்த அரசியல் விடயங்கள் உங்கள் மனதில் பூஜ்யங்களாக இருக்கின்றது'', என்று கவிஞர் காசி ஆனந்தனுக்கு எழுதி உள்ளீர்கள்.

### ஜின்னா போல் செய்திருக்கலாமே!

தாங்கள் குறிப்பிட்டது போல சென்ற 30 வருட காலமாக நடந்த அரசியல் விடயங்கள் என்மனதிலும் பூஜ்யங்களாகவே இருக்கின்றன. திரு. காசி ஆனந்தன் ஒரு கவிஞர். நான் ஓர் எழுத்தாளன். இருவருமே இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள். கடந்தஅறுபது வருடகாலமாக அரசியல் ஈடுபாடும், எமது நாட்டின் அரசியலில் அங்கமாகவும் இருந்த நீங்கள் முகமது அலி ஜின்னாவைப்போல ஏன் 1947-ம் 48ம் ஆண்டுகளில் தமிழ் ஈழம் உருவாக்கத் தவறினீர்கள் என்பதற்கான விளக்கத்தை பகிரங்கமாக வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1947ம்- ஆண்டிலே திரு. டி. எஸ். சேனநாயக்காவின் தலைமையிலான யூ. என். பி. அரசாங்கத்தில் அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. வி. சுந்தரலிங்கமாகிய நீங்களும் இருந்தீர்கள். பிரதமர் திரு. டி.எஸ். சேனநாயக்காவின் தலைமையிலான மந்திரி சபைக் கூட்டங்களின் போது இந்தியா – பாகிஸ்தானிய பிரஜா உரிமைச் சட்ட நகல் இன்றேல் நகல்மசோதா விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மந்திரிசபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற பின்னரே மசோதா சனப்பிரதிநிதிகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டம் இந்த நாட்டிலே வாழ்கின்ற சுமார் 15 இலட்சம் இந்திய வம்சாவழி தமிழர்களை நாடற்ற பிரஜைகளாக்கிமலையகத்தைச்சேர்ந்த சுமார் பத்து தமிழ் பிரதிநிதிகள் மீண்டும் தெரிவு செய்யப் படாமல் போனார்கள்.

### எதிர்ப்போராட்டம் ஏன் நடத்தவில்லை

மந்திரிசபையில் நகல் மசோதா ஆராய்வுக்காக எடுக்கப்பட்டவுடனேயே ஏன் தாங்கள் அமைச்சர் பதவியை இராஜினமாச் செய்து திரு. செல்வநாயகம் உட்பட ஏனைய தமிழ்த் தலைவர்களையும் தமிழ்மக்களையும் தட்டி எழுப்பி வீரராகிய நீங்கள் எதிர்ப்போராட்டம் ஒன்றை நடத்தி நாட்டு மக்களின் அபிப்பிராயத்தையும், உலகமக்களின் அபிப்பிராயத்தையும் திரட்டி நகல்மசோதா சனப்பிரதிநிதிகள்சபைக்கு நுழையாமல் தடுக்க முன்வரவில்லை?

ஐயா, உங்களை வீரர் என்று பிரஸ்தாபிக்கின்றீர்கள். இந்த நாட்டிலே தமிழ்மக்கள் இவ்வளவு இழிநிலைக்கு இரண்டாந்தரப் பிரசைகளாக வாழ்வதற்கு அதன் பயனாக கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன் போன்ற என்னை ஒத்த இளைஞர்கள் சிறை செல்லவும் வாடவும் காரணகர்த்தாக்களில் நீங்களும் ஒருவராகும்.

இன்று உங்களைப் போன்ற அரசியல் தலைவர்களால்தான் இளைஞர்களாகிய நாம் எதிர், எதிர் அணிகளில் நின்று தமிழர்களின் உரிமைகளை எடுப்பதற்காக எமக்குப் புரிந்த நம்பிக்கையான பாதைகளில் உழைக்கவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்

எனவே இளைஞர்களாகிய நாம் எமக்குச் சரி என்ற அரசியல் பாதையில் சென்று போராடதமிழரின் உரிமையை பெற விரும்புகின்றோம். தயவு செய்து மீண்டும், மீண்டும் குறுக்கிடு செய்து எமது முன்னேற்றத்துக்குத் தடை செய்ய வேண்டாம் என்று தமிழினத்தின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

# வடக்கில் ஜி.ஜி.க்கு ஐந்து சிலைகள்!

## கொழும்பிலும் நிறுவ முயற்சி

யாழ்ப்பாணம், வியா வடபகுதியில், அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு ஐந்து சிலைகள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் மூன்று வெங்கலச் சிலையாகும்.

யாழ்ப்பாணத்தில், குருநகரில் ஒரு சிலை நிறுவப்படவிருக்கிறது, இச்சிலை பூர்த்தியடைந்துள்ளது. இம் மாதம் 26-ம் திகதி குருநகரில் இச்சிலை திறந்துவைக்கப்பட விருப்பதாக தெரியவருகிறது.

குருநகர் பகுதியில், மற்றொரு ஜி. ஜி. யின் சிலை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சிலை இன்னும் இரு மாத காலத்தில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்குமுன் வெங்கலச்சிலை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. சுமார் 25,000 ரூபா செலவில் நிறுவப்படும் இச் சிலையின் அமைப்புவேலைகளுக்கு, சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களைக்கொண்ட குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

ஜி. ஜி. யின் பூதவுடல் தகனம்செய்யப்பட்ட பருத்தித்துறை கடற்கரையிலும். ஜி. ஜி யின் வெங்கலச்சிலை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. என். நடராசா இச் சிலை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை செய்துவருகிறார்.

அகிலஇலங்கை தமிழ்க்காங்கிரசும், ஜி. ஜி. யின் வெங்கலச்சிலை ஒன்றை நிறுவ தீர்மானித்துள்ளது. இதற்கான இடம் இன்னும் தெரிவுசெய்யப்படவில்லை.

குருநகரில் அமைக்கப்பட்டு வரும் இரண்டாவது சிலை, ஜி. ஜி. யின் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற, யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் உள்ள முற்றவெளி மைதானத்தில் நிறுவப்படுமென்று தெரியவருகிறது

கொழும்பு மாநகரிலும் ஜி. ஜிக்கு சிலையொன்று நிறுவுவதற்கு இம்மாதம் 11-ம் திகதி ஆலோசனைசெய்யப்படவிருக்கிறது. கொழும்பிலுள்ள பல ஆதரவாளர்கள் இம் முயற்சிக்கு ஆதரவுதெரிவித்துள்ளனராம்.

கொழும்பு குவின்ஸ் வீதியில் உள்ள ஜி. ஜி. யின் இல்லத்தில் நாளை 11-ம் திகதி ஜி. ஜி. யின் வீட்டுக் கிருத்தியம் நடைபெறவிருக்கிறது. அன்றுமாலை சிலை நிறுவுவது பற்றி ஆலோசிக்கப்படவிருக்கிறது.

(க)

## மந்திரியாக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றுத் திட்டங்களையோ புதிய யோசனைகளையோ தெரிவிக்கவில்லை.

### ஹிந்தி கிளர்ச்சிக்கு காரணமானவர்கள்

ஹிந்திக் கிளர்ச்சிக்கு காரணகர்த்தாக்களாக இருந்த ஜன சங் சோஷலிஸ்ட்கட்சிகளும் வகுப்புவாத கிளர்ச்சிகளுக்கு மூலகர்த்தாக்களாக இருந்த ஆர். எஸ். எஸ்.ஆகியவையின் கூட்டே ஜனதாகட்சி. இவர்கள் தேசபிதா காந்தியும் ஜவகர்லால் நேருவும் ஆக்கிய அடிப்படைக்கொள்கைகளையே அழிக்கமுயற்சிக்கின்றனர்.

ஜனதா கட்சியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்கூட பல முரண்பாடுகள் உள்ளன.

(இ)

செம்மணி சம்பவம்

# இது ஒரு அநியாயமான கொலை: பொலிஸ் விசாரணை செய்யவேண்டும்

## யாழ்ப்பாண நீதவான் தீர்ப்பு

— கா. லோகநாதன் —

**"இது ஒரு அநியாயமான கொலை என்றுதான் தீர்ப்பளித்து, பொலிஸ் மேலும் விசாரணை செய்யவேண்டுமென்றும் சட்டமா அதிபருக்கும் வழக்குத் தொடுநருக்கும் அறிவிக்கப்படவேண்டுமென்றும் கட்டளையிடுகிறேன்."**

செம்மணி துப்பாக்கிச் சூட்டில் பலியான பொன்னம்பலம் பரராசாவின் மரண விசாரணையில் தீர்ப்பளித்த யாழ். நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

தீர்ப்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது:— என் முன்னிலையில் அளிக்கப்பட்ட 18 சாட்சிகளின் வாக்குமூலப்படி காலஞ்சென்ற பொன்னம்பலம் பரராசாவின் மரணம் பிரேத பரிசோதனையில் குறிப்பிட்டு, இத்துடன் இணைக்கப்பட்ட பி 3ல் விபரிக்கப்பட்டிருக்கும் இறந்தவரின் உடலில் உள்ள துப்பாக்கிச் சூட்டு காயங்களினால் ஏற்பட்ட அதிர்ச்சியாலும் இரத்தப் பெருக்கினாலும் ஏற்பட்டதென நான் தீர்ப்பளிக்கின்றேன்.

இந்தக் காயங்கள் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டதென்றும், அது பொலிஸ் கான்ஸ்டபிள் ஸ்ரான்லியினால் சுடப்பட்டதென்றும் 8வது சாட்சியின்படி இரண்டாவது சந்தேக நபரான தர்மதாசா இதற்கு உடந்தையாக இருந்துள்ளாரென்றும், நான் தீர்ப்பளிக்கிறேன். இது ஒரு அநியாயமான கொலையென்று நான் தீர்ப்பளித்து பொலிஸ் மேலும் விசாரணை செய்யவேண்டுமென்றும், சட்டமா அதிபருக்கும், வழக்குத் தொடுநருக்கும் அறிவிக்கப்படவேண்டுமென்று கட்டளையிடுகிறேன்.

இரண்டாவது சந்தேக நபரை பிணையில் விடும்படி உதவிப் பொலிஸ் அதிபர் திரு. பெரேரா விண்ணப்பித்திருக்கிறார். இவ்விண்ணப்பத்தை நான் நிராகரித்திருக்கிறேன். ஏனென்றால் பொலிஸ் அதிகாரி அதிகாரிகளினால் அளிக்கப்பட்ட சாட்சிகளிலிருந்தும், காலஞ்சென்றவர் உடனடியாக இறந்திருக்கவேண்டும் அல்லது 5 நிமிடங்களுக்குள் இறந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆயுதங்கள் இறந்தவரின் உடம்புக்கும் அருகில் இருக்கக் கூடிய நிலையில், விடப்பட்டிருந்தால் ஒரு சரியான முடிவுக்கு வருவதற்கு நீதிமன்றத்திற்கு உதவியாக இருந்திருக்கும், இந்த விசாரணையில் நான் விசேடமாக குறிப்பிடவேண்டியது என்னவென்றால் இப்போதுள்ள சிரேஷ்ட அனுபவம் வாய்ந்த தலைமைக்காரியாலய உத்தியோகத்தர்களில் எவராவது மிகக்கிட்டவுள்ள சமாதான நீதவானுக்கோ உத்தியோகப்பற்றற்ற நீதிபதிக்கோ, அல்லது மரண விசாரணை அதிகாரிக்கோ நீதவானுக்கோ இந்தச்சம்பவம் பற்றி மறுநாள் காலை 7-30 மணிவரையும் அறிவிக்கப்படவில்லை. நீதிமன்றத்தின் கருத்துப்படியும், வைத்திய சாட்சியத்தின்படியும் இரவு 10 மணிக்கு முன்னதாககாலஞ்சென்றவர் இறந்திருக்கவேண்டும்.

மேலும் காலஞ் சென்ற பரராசா 10-8-76-ல் நல்லூர் கந்தசாமி கோவிலிலிருந்து 10-ம் திருவிழா பார்த்துவிட்டு திரும்பும் பொழுதுதான் பாரதூரமான இச்சூடு நடைபெற்றது எனக்கருதுகிறேன். உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. தாமோதரம்பிள்ளை அவரது வாக்கு மூலத்தின்படி கோவிலில் இரவு 9 மணிவரை நின்றிருக்கிறார்' சம்பந்தப்பட்ட நிலைக்களத்தினால் இச்சம்பவம் பற்றி மேலும் விசாரணை நடத்தப்படவேண்டும்.

இதுபற்றி தான் ஒருகருத்தும் தெரிவிக்கவில்லை. ஆனால் பொலிசார், பொதுசனதொடர்பு பற்றிய நலன் கருதி இது மேலதிகாரிகளால் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டிய ஒரு விஷயமாகும்.

இவ்விசாரணை தொடங்கிய நேரம்முதல் நிலவிவரும் கொந்தளிப்பைப் பார்க்கும் இடத்து நான் இந்த சந்தேக நபர்களை நீதியின் நலன் கருதியும், மக்கள் நீதிபரிபாலனத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற படியினாலும் சநதேக நபர்களை விளக்கமறியலில் வைக்கிறேன்.

மேலும் நான் கூறவேண்டியதென்னவென்றால் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. பெரேரா விசாரணையில் முக்கியஸ்தராக இருந்து எல்லாவித ஒத்துழைப்பையும் கொடுத்தார். அவர் அமைதியான முறையில் விசாரணையை நடத்த உதவியுள்ளார். மற்ற சட்டத்தரணிகளும் திரு. பெரேரா நீதியான முறையில் நடந்துள்ளார் எனக்கூறியுள்ளார்கள். அதனால் பொது மக்களும் எவ்வித பயமுமின்றி இவ்விசாரணையை வந்து பார்வையிடக்கூடியதாக இருந்தது. அத்துடன் வேறு எந்த விதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை.

மரணவிசாரணையின் நடவடிக்கை குறிப்புகளை சட்டமா அதிபருக்கு அவரது பார்வைக்கும், இந்நீதிமன்றம் மேலும் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது பற்றிய கட்டளைக்குமாக அனுப்பி வைக்கிறேன். (க)

## மூதாட்டிக்கு வாழ்க்கை வெறுத்தது

சாவகச்சேரி, புதன் எழுபத்தைந்து வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் பெரிய மரமொன்றில் ஏறி கழுத்தில் கயிறுமாட்டி தொங்கி உயிரைப் போக்கிக் கொண்டார்.

இச்சம்பவம் சாவகச்சேரிப் பொலிஸ் பகுதியைசேர்ந்த கெற்பலியில் நடைபெற்றது. முத்தையா பெண் நாகமுத்து என்பவரே இவ்வாறு தற்கொலைசெய்துகொண்டவராவர்.

சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு.எஸ்.கனகசாமி மரணவிசாரணை நடத்தினார் சாவகச்சேரி வைத்திய அதிகாரி டாக்டர் ரி.வி. பேரின்பநாயகம் பிரேத பரிசோதனை செய்தார்.

இவ்வயோதிபப் பெண்ணுக்கு, பிள்ளைகள்இல்லையென்றும் இவரது சகோதரர்கள் பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தாரென்றும், மனக்கவலை காரணமாக தற்கொலை செய்தாரென்றும் தெரிவிக்கப்பட்டன. தற்கொலை என்று தீர்ப்புக்கூறப்பட்டது. (உ)

## ஈழத்து வில்லிசைக் குழுவுக்கு கோலாலம்பூரில் கௌரவம்

கோலாலம்பூர், மார்ச் 9 'மகாபாரத அர்ச்சுனன் அடக்கமானவன்' என்று கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன்கோவில் தேவஸ்தானத் தலைவர் திரு. செ. சொக்கலிங்கம் கூறினார்.

சன்மார்க்க சங்க ஏற்பாட்டில் வள்ளலார் மன்றத்தில் ஈழத்திலிருந்து வந்த கலைவாணர் வில்லிசைக் குழுவினர் 18 நாள்பாரதப்போரை 10நாளில் திறமையுடன் அபிநயத்துடன் கூறிமுடித்த இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோதே திரு. சொக்கலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: இன்று முடிந்த பாரதப்போரின் இறுதிநாள் வில்லிசைக்கச்சேரி பாரதப்போரையே நம் கண்முன் நிறுத்திவிட்டது. இதில் அர்ச்சுனன் முக்கிய பாத்திரம். குருகுலவாசம் செய்கின்ற காலத்திலேயே அர்ச்சுனன் மிக அடக்கமாக இருந்தவன்.

துரியோதனாதியரும்— பாண்டவர்களும் கிருபாச்சாரியிடம் குருகுலவாசஞ் செய்துகொண்டிருந்தசமயத்தில் விளையாட்டு நேரத்தில் அவர்கள் விளையாடிக்கொண்டிருந்தபந்து கிணற்றில் விழுந்துவிட்டது,

பந்தை எடுக்கமுடியாமல் தவித்துக்கொண்டிருந்த குருகுலவாசிகள் துரோணர் வருவதைக்கண்டனர். துரோணர் ஏதோ கேட்க துரியோதனாதிகள் 'கிழவா! நீ உன்வழியே போ' என்றனர். அர்ச்சுனன் மட்டும் அமைதியாக இருந்தான். அவன் அடக்கத்தைக் கண்டு கிணற்றில் விழுந்த பந்து விஷயத்தை அவனிடம் ஒரு மந்திரத்தை உச்சரித்துச் சொல்லி கையில் சீவிரங்கக் குச்சியைக் கொடுத்து கிணற்றில் எறியசொன்னார் துரோணர். அக்குச்சியின் வழியே அப்பந்து மேலேவந்துவிட்டது. துரோணரின் சக்தியை அப்போதுதான் எல்லோரும் உணர்ந்தனர்'.

திரு. சொக்கலிங்கம் மேலும் பேசுகையில், 'தாய்மொழியை மறந்து வேறுமொழியிலேயே காலத்தைக்கழிப்பவன் பிறகு ஒருநாள் அதற்காக வருந்தவே செய்வான். எதையுமே தாய்மொழியில்தான்கற்கவேண்டும் அதில் ஒருமனநிறைவும் திருப்தியும்ஏற்படும்' என்றார்.

மேற்படி வில்லிசைக்குழுவிற்கு 'வில்லிசைக் கலைஞான ஜோதி' என்ற விருது சன்மார்க்கசபை சார்பில் வழங்கப்பட்டது. (உ)

மிளகாய் பயிர்செய்கிறீர்களா?

அப்படியானல் குருமன் நோயை கட்டுப்படுத்த இன்றே பாவியுங்கள்

BAYER

பொலிமற் எஸ்.சி 50%

மேற்கு ஜேர்மன் பாயர் ஸ்தாபனத்தின் புதிய தயாரிப்பு, ஒரு சிறந்த சர்வ பூச்சி நாசினி



மேலும் பொலிமற் திரிப்ஸ், அழுக்கணவன், வெண் ஈ, சிற்றுண்ணி, போஞ்சி ஈ, தத்துக்கிளி துளை புழுக்கள், ஆகியவற்றை கீழ்வரும் பயிர்களில் திறமாக கட்டுப்படுத்தும்.

- நெல்
- புகையிலை
- காய்கறி
- பழறுவகை
- உருளைக்கிழங்கு
- போஞ்சிவகை
- பூஞ்செடி
- கோப்பி
- திராட்சை
- தோடை
- பருத்தி
- வெங்காயம்

பொலிமற் பயிர்களை ஊக்கமாகவும், திடகாத்திரமாகவும் வளரச்செய்யும்.

பொலிமற் உடன் கெந்தகம் கலக்கப்படாது பயிர்களை பாதுகாக்க தாமதியாது பாவியுங்கள் பொலிமற்,

தயாரிப்பாளர்.

ஹேகெம் லிமிடெட்

400 டீன்ஸ் ரேட் கொழும்பு-10

டெலிபோன் 93563 - 96331

Melville Assauw Designs

## கைப்பணி ஆசிரியர் பயிற்சியில் பாகுபாடு?

### கல்வி அமைச்சருக்கு மகஜர்

இமையாணன், புதன் கைப்பணி ஆசிரியர்களாக நியமனம் பெற்ற சில ஆசிரியர்கள் தமக்குக்காட்டப்படும் பாகுபாடு குறித்து கல்வியமைச்சருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர்.

மரவேலை, உலோகவேலை நெசவு,வனைதல் ஆகிய பாடங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு அந்தந்த பாடங்களில் இதற்கு முன்னர் கொடுக்கப்பட்டது போல பயிற்சி இல்லாமல் ஆரம்பக் கல்விப் பயிற்சியே அளிக்கப்படுகிறதாம்.

இதன் பொருட்டு வடபகுதியில் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 24 ஆண் கைப்பணி ஆசிரியர்களும் சுமார் 15 பெண் கைப்பணி ஆசிரியைகளும் ஆரம்ப கல்விப் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனல் இவர்களை கைப்பணி ஆசிரியர்களாகவே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்ட போது அந்தந்தப் பாடங்களுக்கான தராதரப் பத்திரங்கள் முக்கியமாகப் பரிசீலிக்கப்பட்டன.

ஆனல்மேற்கூறிய நான்கு வகை ஆசிரியர்கள் தவிர்ந்த மற்றைய பாடங்களான விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், விவசாயம், மனையியல், வரைதல், சங்கீதம் நடனம், உடற்கல்வி, வர்த்தகம் போன்ற பாட ஆசிரியர்களுக்கு அந்தந்தப் பாடங்களுக்கு, பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதனால் பிரஸ்தாப நான்கு பாட ஆசிரியர்கள் தமக்கு மட்டுமே இப்பாகுபாடு காட்டப்படுகிறது என்று கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

இதுதொடர்பாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இவ்வாசிரியர்கள் தொடர்பு கொண்டதுடன் கல்விமந்திரி பிரதம கல்விஅதிகாரி (கைப்பணி)உட்பட இதனோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளனர். (உ)

**நாகம்ஸ்**
[சுன்னுகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
**அன்பைத்தேடி**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி — வாணிஸ்ரீ
**நிறைகுடம்**

**வெலிங்டன்** எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
[யாழ். நகர்]
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**தனிப்பிறவி**

**லிடோ** போன்: 7693 சிவகுமார் — ஜெய்சித்ரா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
**வெள்ளிக்கிழமை விரதம்**
(புதிய பிரதி)

**றீகல்** தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
(யாழ்ப்பாணம்)
**CRAZY BOYS MUSKETEERS**
குறும்புக்கார வாள் வீரர்கள்

Crazy Boys are back with the Musketeers to entertain you. Do join in their fun along with your kids.

குறும்புக்காரப் பையன்கள் உங்களை மகிழ்விக்க இங்கு வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் செய்யும் அட்டகாசம் உங்களை வயிறுபுண்ணுகும் வரை சிரிக்க வைக்கும். அவர்களின் குறும்பில் நீங்களும் பங்குகொள்ளத் தவறுதீர்கள்.

**RIO** Daily 4 Shows
(Jaffna)
GRAND RELEASE TODAY
**The Girl Who Couldn,t Say No**
(Adults only)

Gloriously Funny Commedy of
A Girl so warm Hearted that she couldn't say No and to add to her problems Men find her irresistable

**ராஜா** ஸ்ரீகாந்த் - பிரமிளா
[யாழ். நகர்] நாகேஷ் - லக்ஷ்மி (பசு)
தினசரி 4 காட்சிகள் நடித்த
**கோமாதா என் குலமாதா**
ஈஸ்மன் கலர் (புதியபிரதி)

**ஸ்ரீதர்** ○ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ○ ஜெயலலிதா ○ சுந்தரராஜன்
○ விஜயகுமார் ○ கோபி கிருஷ்ண
தினசரி 4 காட்சிகள் நடித்த
**பாட்டும் பரதமும்**

**ராணி** கமலஹாசன் -- தீபா - சாவித்திரி
நடித்த
[யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
**அந்தரங்கம்**

**வின்ஸர்** கமலஹாசன் - ஸ்ரீவித்யா
[யாழ். நகர்] சுந்தரராஜன் ஜெயசுதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**அபூர்வ ராகங்கள்**

6-வது வெற்றி வாரம்!
**மனோகரா** எம்.ஜி. ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)


# நாளை யாழ். நகரில் மாவோ புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், வியா.

மாஓசேதுங்கின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் புகைப்படக் காட்சியும் புத்தகக்காட்சியும் யாழ். நகரில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளைமாலை இக்கண்காட்சியை யாழ். நீதிபதி திரு. கே.வி. நவரத்தினம் ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை காட்சி நடைபெறும்.

நாளை திறப்பு விழா வைபவத்தின் பின் நூலக அருகில் சீனத்திரைப்படங்கள் காண்பிக்கப்படும்.

இலங்கை-சீன நட்புறவுச் சங்க யாழ். கிளையால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்புகைப்பட புத்தகக் கண்காட்சி தொடர்ந்து ஒரு வாரகாலத்திற்கு கோப்பாய், அரியாலை, பருத்தித்துறை, வேலணை, மட்டுவில் கிளிநொச்சி ஆகிய இடங்களிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# ஆரம்பக் கல்வி

## பன்முகப்படுத்தப்படும்

கொழும்பு, புதன்

1ம் வகுப்பில் இருந்து 5ம் வகுப்புவரையிலான ஆரம்பக் கல்வி பன்முகப்படுத்தப்பட்டுள்ளது.

பன்முகப் படுத்தும் திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சு விசேட வட்டாரக் கல்வி அதிகாரிகளையும் மேற்பார்வையாளர்களையும் நியமிக்கவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு பயிற்சிக் கலாசாலைகளில் குறிகியகாலப் பயிற்சி அளிக்கப்படஉள்ளது. (இ)



## தவக்கால நற்சிந்தனை

''நான் உனக்குப் போதித்து, நீ நடத்தவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன் மேல் என் கண்களை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்'' (சங்கீதம் 32-8)

நமக்குப் போதிப்பவரும், வழிகாட்டியும், நாம் தீய வழியில் செல்லாமல் பாதுகாக்கும் காவலரும், ''நாம் இப்படித்தான் நடக்கவேண்டும்'' என்று அதிகாரம் செய்யாமல் ஆலோசனை சொல்பவராகவும் நமக்குத் தேவன் துணைபுரிகிறார். அப்போதனைகளையும், நன்நெறிகளையும் அகற்றிவிட்டு நாம் போகும் காட்டுப்பாதையில் களியாட்ட நடைநடந்து நாம் போகும் நம்போக்கிலே போனால் அது யார் குற்றம்? ஆண்டவருடைய குற்றமா? அல்லது நம் குற்றமா? சிந்தித்துப் பாருங்கள்!

''இது நல்லது, இது கெட்டது'' என்று அறிந்த நாம் வாழ்க்கையிலே பெரும்பாலும் கெட்டவைகளுக்கே முதலிடம் அளிக்கிறோம். ஐம்புலன்களைப் பயன்படுத்தி ஆகாத அவலச் செயல்களை ஆடம்பரத்தோடு செய்து முடிக்கிறோம். பெரியவர்கள் விசுவாசிகள், தெய்வச்சாட்சிகள், குருவானவர்கள் ஆகியோர் சொல்லுகின்ற அத்தனை அறிவாற்றல் மிகுந்த அன்பு உபதேசங்களை ஆண்டவரின் தீஞ்சுவை மிக்க வேதவாக்கியங்களை கேட்கிறோமா? சிந்திக்கின்றோமா? இத்தனையையும் செய்துவிட்டு இவைகளை எல்லாம் ஆண்டவர் மன்னிக்க வேண்டும். அவரால் மன்னிக்கப் பட்டுவிடும் என்று நாம்எண்ணுவது சரியாகுமா?

— ஞானஒளி


**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-3
சிவாஜி-தேவிகா
**அன்புக்கரங்கள்**


## இன்று கச்சதீவு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுவான், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை மயிலிட்டி யாழ்ப்பாணம் ஆகிய துறைமுகங்களில் சுங்கப் பகுதியினரால் வழங்கப்படும். இந்த விண்ணப்பத்தின்மீது பெறும் அனுமதி இம்மாதம் 14-ம் திகதிவரை மட்டும் செல்லுபடியாகும் என்று இதுசம்பந்தமான படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரத்தில் அனுமதிக்கப்படும் நகைகள் திரும்பி வரும் போது பரிசோதனைக்காகக் கையளிக்கப்பட வேண்டும். பத்திரத்தில் குறித்த நகைகளைக் திருப்பிக்கொண்டு வரத் தவறும் பட்சத்தில் அவற்றின் பெறுமதியின் மூன்று மடங்கு குற்றப்பணமாகச் செலுத்த வேண்டும்.

ஒரு பிரயாணியால் இப்படிவத்தில் குறிப்பிட்ட நகைகள் திருப்பிக் கொண்டுவரப்பட்டன என்று சுங்க அதிகாரியால் உறுதிப்படுத்தப்படாவிடின் குற்றப்பணத்தைக் கட்டுவதற்குப் பிரயாணி தயாராக இருக்க வேண்டும்.

கச்சதீவு உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. 14ம் திகதி உற்சவம் முடிவடைகிறது. யாத்திரீகர் எவரும் 14ம் திகதிக்கு முன் திரும்பிவிடவேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது.

### சட்டத்தை மீறினுல் நடவடிக்கை

உற்சவம் சம்பந்தமாக யாத்ரீகர்களுக்கு விதித்துள்ள உத்தரவுகளை மீறி நடப்பவர்கள் மீது இம்முறை சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

உத்தரவைமீறி தேங்காய் எண்ணை எடுத்துச் செல்பவர்கள் இம் முறை அவற்றைக் கச்சதீவிலேயே பறிகொடுக்க நேரிடுமாம். கொண்டு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள தேங்காய் எண்ணை உட்பட மற்றும் பொருட்கள் கச்சதீவில் வைத்திருந்தாலும் சட்டப்படி அவை பறிமுதலாகுமாம். சுங்க இலாகா உத்தியோகத்தர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

உத்தரவுக்கு மாருக சட்ட விரோதமாகப் பொருட்களை ஏற்றிச் செல்லும் படகுக்காரர்களுக்கும் படகு உத்தரவுப்பத்திரங்கள் உடன் ரத்துச் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த நடவடிக்கையின் மூலம் படகுகள் கடுமையாகப் பரிசோதனை செய்யப்படும். ஒவ்வொரு யாத்திரீகரும்எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களுக்கு அதிகமாகக் கச்சதீவில் வைத்திருந்தால் அவை அங்கு பறிமுதலாகும். (அ)

## கச்சேரியிலும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமைக்குமுன் தீர்மானிக்கப்படும் என உதவி ஆணையாளர் பிரதி நிதிகளிடம் தெரிவித்தார்.

இதன்பின்னர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு பிரதான வீதிவழியாக யாழ்ப்பாணம் கச்சேரியை நோக்கி ஊர்வலமாக சென்றனர்.

நண்பகல் 12 மணிக்கு அரசாங்க அதிபர்காரியாலயத்தை நோக்கிச்சென்றனர். அரசாங்க அதிபர் கொழும்பு சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து இவர்கள் மேலதிக அரசாசாங்க அதிபர் காரியாலய வாசலில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசேப் வாசலுக்கு வந்தபோது ஊழியர்கள் வழியைத்தடை செய்து கொண்டிருந்தனர். திரு. ஜோசேப் மீண்டும் காரியாலயத்திற்குள் சென்று விட்டார்.

இதன் பின் சத்தியாக்கிரகத்திலிருந்த கூட்டுறவுசம்மேளன வடபிரதேச தலைவர் திரு. அமிர்தசிங்கம், செயலாளர் திரு. ராசேந்திரம் பட்டணக்கிளையைச்சேர்ந்த திரு. வி. சண்முகராசா, சங்கானைக்கிளையைச் சேர்ந்த திரு, எஸ். கே. திருச்சிற்றம்பலம் திரு. இராசரத்தினம் ஆகியோர் உள்ளே சென்று திரு. ஜோசெப்புடன் சுமார் ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சங்கானை ப.நோ.கூ.ச. நெறியாளர் குழு ஆயுள் காலத்தை நீடிக்கவேண்டாம்எனக் கோரினார்கள்.

அரசாங்க அதிபர் நாளை கொழும்பிலிருந்து திரும்பிவிடுவாரென்றும் நாளைக் காலை வந்து பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்துமாறும் தம்மிடம் தெரிவித்த விஷயங்களை அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகவும் திரு. ஜோசெப் உறுதியளித்தார்.

இதன்பின் அவர்கள் பிரதான வீதிவழியாக ஊர்வலமாகச்சென்றனர். (அ)

## கொடித்தின...

4ம் பக்கத் தொடர்ச்சி

நாம் ஒன்ருக வாழவும் ஒருவரையொருவர் நேசிக்கவும் பழகவேண்டும் பிரிந்து வாழப் பழகக்கூடாது. எனவே அவர்கள் பால் உங்கள் ஆதரவினைச் சிறிது அளவிலாவது காட்டுமாறு அழைக்கின்றோம்.

மாதமொன்றுக்கு ரூபா மூன்று வழங்குவதால் ஆதரவற்ற குழந்தையொன்றுக்கு மாதத்தில் ஒருதடவையாவது ஆதரவு கொடுத்தவர்களாவீர்கள். மாதமொன்றுக்கு ரூபா ஐந்து வழங்குவதால் உணவில்லாக்குழந்தையொன்றுக்கு மாதத்தில் இருமுறை உணவூட்டியவராவீர்கள். மாதத்துக்கு ரூபா எழுபத்தைந்து வழங்குவதால்அக்குழந்தையை மாதம் முழுவதும் பராமரித்தவராவீர்கள். ஒரு குழந்தைக்கு ஒரு தொழிலைக் கற்பித்துவிட வாய்ப்பளிப்பீர்களாயின் அக்குழந்தையை வாழ்நாள் முழுவதும் பராமரித்தவராவீர்கள். இவற்றுள் எதுஉங்கள் பங்கு என்று இன்றே தீர்மானம் செய்துசெயலாற்றுங்கள்.

சிறுவர்களுக்குத் தொழிற் பயிற்சி வழங்க தளபாடங்களைக்கொண்ட ஒரு நெசவு சாலை, உயர்கல்வி நாடிச் செல்லும் மாணவர்களுக்கு சகாய நிதி ஆரம்பித்தல், வருடமொன்றுக்கு ரூபா 750 ஐ வங்கி வட்டியாக ஈட்டக்கூடிய தொகையினை வழங்கி அதன் மூலம் ஆதரவற்ற ஒருகுழந்தையைப் பராமரிக்க தருமவான்களைச் சேர்த்த இத்தகைய பெரும்பணிகளை அத்தியாவசியமாக நாம் நிறைவேற்றுதல் வேண்டும்.

இப்படியான நோக்கங்களை ஆக்கமுறச் செய்வதற்குஇன்று அகில இலங்கையிலும் நடாத்தப்படும் அநாதைகள் கொடித்தினத்துக்கு ஆதரவு நல்குமாறு பொதுமக்களை வேண்டிக் கொள்ளுகின்றோம். (அ)

**ஈழநாடு சந்தா**
(தபால் மூலம் விநியோகம்)
(தினசரி – வாரமலர் உட்பட)

| | | |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. | 47-00 |
| 6 மாதம் | ரூ. | 94-00 |
| 1 வருடம் | ரூ. | 188-00 |

# ஈழநாடு
The EELANADU

**ஈழநாடு சந்தா**
(ஆள் மூலம் விநியோகம்)
(யாழ்- மாநகரசபை எல்லைக்குள்)
(தினசரி வாரமலர் உட்பட)

| | | |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. | 37-50 |
| 6 மாதம் | ரூ. | 75-00 |
| 1 வருடம் | ரூ. | 150-00 |


# நெடுங்கேணிக் கொள்ளை: எதிரிக்கு 10 வருடக் கடுழியம்!

வவனியா, புதன்

நெடுங்கேணி வங்கிக் கொள்ளை வழக்கில் எதிரியான முத்தையா தருமலிங்கத்திற்கு விடுவடுத்த குற்றத்திற்கு 5 வருடக் கடுழியமும், கொள்ளைக்கு 5 வருடக் கடுழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டு தண்டனையை ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டும் என நீதிபதி தீர்ப்பளித்தார்.

இவ் வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு இன்றுகாலை தீர்ப்புவழங்கப்பட்டது.

இவ்வழக்கில் நெடுங்கேணிக் கிராமிய வங்கியில் 2லட்சத்து 12 ஆயிரத்து நானூறுரூபா பெறுமதியான நகைகளும், 70,643 ரூபா 29 சதம் ரொக்கமும் கொள்ளையடித்ததாக முத்தையா தர்மலிங்கம் என்ற இளைஞர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக சட்டத்தரணி தில்லைநடேசன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் ஆஜரானார்.

கடந்த தவணையின்போது எதிரிகுற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தார்.

கொள்ளையடிக்கப்பட்ட வற்றில் 10 ஆயிரம் ரூபாவைதவிர மிகுதி பணமும், நகைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுவிட்டன.

தீர்ப்பளிக்கும்போது நீதிபதி இக்கொள்ளை விசாரணையில், சார்ஜண்ட் கந்தப்புவின் திறமையைப் பாராட்டினார். அரசதரப்பு சட்டத்தரணி திரு. ஸ்ரீரஞ்சனும், சார்ஜண்ட் கந்தப்புவிற்கு பாராட்டு தெரிவித்தார். (க)

## கச்சேரியிலும் உதவி ஆணையாளர் முன்னிலும் சத்தியாக்கிரகம்
### சங்கானை ஊழியருக்காக கூட்டுறவு ஊழியர் நடாத்தினர்

யாழ்ப்பாணம், வியாழன்

சங்கானை ப. நோ. கூ. சங்க ஊழியரின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக நேற்று நண்பகல் இலங்கைக் கூட்டுறவு ஊழியர் சம்மேளனத்தைச் சேர்ந்த சுமார் 200 கூட்டுறவு ஊழியர்கள் யாழ்ப்பாணம் கச்சேரியில் ஒரு மணிநேரம் சத்தியாக்கிரகம் செய்தனர்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் காரியாலய வாசலில் சுலோக அட்டைகளுடன் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். இதற்குமுன்னர் காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்திலுள்ள உதவி கூட்டுறவு ஆணையாளர் காரியாலயத்திலும் சத்தியாக்கிரகம் செய்தனர்.

யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வட பிராந்தியத்தைச் சேர்ந்த 32 சங்கங்களிலிருந்தும் கூட்டுறவு ஊழியர் சுலோக அட்டைகளுடன் ஊர்வலமாக காலை 9 மணிக்கு புறப்பட்டுச் சென்றனர்.

"ஊழல் நிர்வாகத்தை ஒழிப்போம். ஊழியரின் வயிற்றில் அடிக்காதே" "ஊழியரே ஒன்றுபடுங்கள்" என்று கோஷமிட்டுச் சென்றனர்.

யாழ். உதவி கூட்டுறவு ஆணையாளர் காரியாலயத்திற்குள்சென்று நிலத்தில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். இவர்களில் கூட்டுறவு ஊழிய சம்மேளன வடபிராந்தியதலைவர் திரு. அமிர்தசிங்கம் தலைமையில் 5 பிரதிநிதிகள், உதவி ஆணையாளர் திரு. கே. ஜெயகாந்தனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

சங்கானை ப. நோ. கூ. சங்க நெறியாளர் குழுவின் ஆயுட்காலம் கடந்தமாதம் 28-ந் திகதியுடன் முடிவடைந்துவிட்டதாகவும், இனிமேல் கால எல்லையை நீடிக்கவேண்டாம் என்றும் உதவி ஆணையாளரிடம் தெரிவித்தனர்.

### 11-ம் திகதிக்கு மூன் தீர்மானிக்கப்படும்

சங்கானை ப. நோ. கூ. சங்கம் தொடர்பாக 11ம் திகதி

(7-ம்பக்கம் பார்க்க)

## மாற்றார் வசைமாரி பொழியினும் ரோஜா ரோஜாவே தான்"
### நெடுஞ்செழியன் கூறுகிறார்

சென்னை, மார்ச் 9

'ரோஜாவை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அது மணக்கும், அதைப்போல்தான் என்ன பெயரிட்டழைத்தாலும் கலைஞர் கருணாநிதி பெயரோ, எனது பெயரோ பேராசிரியர் அன்பழகன் பெயரோ குன்றாது குறையாது' என்று தி. மு. க. பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் கூறினார்.

சென்னையில் பொதுக்கூட்டம் ஒன்றில் அவர்பேசுகையில் மேலும் கூறியதாவது: 'எம்மைத் தாக்குபவர்கள் தமது தரத்தைத்தான் தாழ்த்திக் கொள்கிறார்கள். எவ்வளவோ சிரமங்களை அனுபவித்த நாம் மாற்றார் இழிவாகப் பேசுவது கண்டு கவலைப்படவில்லை' (உ)

"ஜெயலலிதாவின் தாய்

## மரணம் பற்றியும் விசாரணை நடத்தக் கோருங்கள்"
### எம். ஜி. ஆரிடம் தி. மு. க. கிண்டல்

சென்னை, மார்ச் 9

"அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், தி. மு. க. ஆட்சியில் நடந்த மர்மச்சாவுகள் பற்றி விசாரணைவேண்டும்" என்று தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசியிருப்பது குறித்து தி. மு. க. நாளேடான 'முரசொலி' கார்ட்டூன் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

"ஒருவருடமாக ஜனாதிபதி ஆட்சிதானே தமிழ்நாட்டில் நடக்கிறது. ஏன் விசாரணை வைக்கவில்லை? அப்படியே நடிகை ஜெயலலிதாவின் தாயான நடிகை சந்தியாவின் சாவுக்கும் சேர்த்து விசாரணை வைக்கச் சொல்லுங்கள்" என்று எம்.ஜி.ஆரை கிண்டல் செய்து இக்கார்ட்டூன் தீட்டப்பட்டுள்ளது.

எம். ஜி. ஆர். ஒரு மேடையில் இருகரங்களையும் உயர்த்தி ஆவேசமாக இதைப்பேசுவதை போலவும் கழுத்தில் கைக்குட்டைகளைக்கட்டிக்கொண்ட இருவர் மட்டுமே சமுகமளித்திருக்கும் இக்கூட்டத்திற்கு ஒருநாயும் வந்திருப்பதுபோலவும் மேற்படி இருவரில் ஒருவர் எழுந்து எம். ஜி. ஆரை 'வாத்தியாரே' என்று விளித்து சந்தியா சாவு பற்றி விசாரணை செய்யக்கோருவதாகவும் இக் கார்ட்டூன் வரையப்பட்டுள்ளது. (உ)

இன்று

## கைதடி சைவ அநாதை இல்ல கொடிநாள் விழா

யாழ்ப்பாணம், வியா.

கைதடி இலங்கை சைவ அநாதை இல்லக் கொடிநாள் விழா இன்று நடைபெறுகிறது.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி கலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமைதாங்குவார்.

சாவகச்சேரி றிபேக் கல்லூரி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

காலை 7 மணிக்கு நல்லூர் எஸ். சந்தானகிருஷ்ணன் குழுவினரின் மங்களஇசை இடம் பெறும்.

யாழ். அரசாங்கஅதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா முதல் கொடி பெறுவார்.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம்.எம்.அப்துல்காதர், யாழ். வளாகத்தலைவர் கலாநிதி க. கைலாசபதி ஆகியோர் வாழ்த்துரையும், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. சிதம்பரப்பிள்ளை சிறப்புரையும் நிகழ்த்துவர்.

திருப்பூங்குடி சகோதரர்களின் பக்திஇசையும் இடம் பெறும்.

பிற்பகல் நடைபெறும் சிறப்புவிழாவிற்கு முன்னாள் உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமைவகிப்பார்.

கோண்டாவில் கே. கானமூர்த்தி குழுவினர், கைதடி ஏ. பொன்னுத்துரை புதல்வர்கள் ஆகியோரின் மங்கள இசையையடுத்து திரு. செ. காங்கேசனின் வரவேற்புரையும், தொழில் அதிபர் திரு.க. கனகராஜா, திரு. க. மயில்வாகனம் ஆகியோரின் வாழ்த்துரைகளும் இடம்பெறும்.

கைதடி கே. பழனி குழுவினரின் தவில்கச்சேரியும் அன்புக்கடல் வி. வி. கே. ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டும் நடைபெறும்.

நாவலர் நினைவுகூடத்தைச் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் திறந்து வைத்து இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.



## மூதூர் நீதிபதி ஞானச்சந்திரன் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம், வியா

கைதடி இலங்கை சைவ அநாதைகள் இல்லக் கொடி நாளையொட்டி மூதூர் நீதவான் திரு. க. ஞானச்சந்திரன் ஆசிச் செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இச்செய்தியில், அருப்பெரும் அருளாளர்கள் தமக்காக எதையும் இறைவனிடம் கேட்டதாக அறியமுடியாது. அவர்கள்பரமனிடம் பரிந்து வேண்டியதெல்

(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்த்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி இவர்கள் திரு.எஸ்.ஜே. வி. தலைமையில் ஆராய்ந்து கொண்டிருந்தபோது பிரதமரின் இக் கடிதம் அங்கு சென்றுள்ளது,

### சிவசிதம்பரம் விளக்கம்

பேச்சுவார்த்தை கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது பற்றி நமது நிருபர் திரு. சிவசிதம்பரத்திடம் கேட்டபோது இதற்கான காரணம் தங்களுக்குப் புரியவில்லை என்றும், பிரதமரிடமிருந்து இது சம்பந்தமாக கடிதம் வந்துள்ளது என்றும் சொன்னார்.

தமிழர் கூட்டணியினருடன் பிரதமர் நடத்தவிருந்த பேச்சுவார்த்தையின்போது அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் திரு. மைத்திரிபாலசேனநாயக்கா, திரு. ரி. பி. இலங்கரத்தின, திரு. பி. பி. ஜி.கலுகல்லே, திரு. செ. குமாரசூரியர், திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோர் கலந்துகொள்ளவிருந்தனர். (ம-ஆ)


## தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்கம்
ஊர்காவற்றுறை

### வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

தரம் பிரிக்கப்படாத சுமார் 30,000 வெற்றுச் சாக்குகளின் விற்பனைக்குரிய கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது. கேள்விப் பத்திரங்கள் பின்வரும் விலாசத்துக்கு ரூபா 2/50 செலுத்தி சங்கத்திலிருந்து பெறப்பட்ட பத்திரத்தில் 16-3-77 திகதிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியவாறு பொதுமுகாமையாளர், தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை எனும் விலாசத்துக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பப்பட வேண்டும்.

கேள்விப்பத்திரப்படிவங்கள் சங்க வேலைநேரத்தில் 16-3-77 பகல் 12 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் ரூபா 250/- வைப்புச்செலுத்தி இருக்கவும் வேண்டும்.

9-3-77.

சு. பழனிவேற்பிள்ளை,
பொதுமுகாமையாளர்

5645



### மரண அறிவித்தல்
**மாவிட்டபுரம் கு. பாலசுந்தரக் குருக்கள்**

நடேஸ்வராக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியரும், மாவை வேதாகம நூல்நிலைய ஸ்தாபகருமான மாவிட்டபுரம் வேதாகம பூஷணம் பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10-3-77) நண்பகல் கீரிமலை மயானத்தில் நடைபெறும்.

5646



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.